# கி. பாகிஸ்தானில் சூறுவளிக்கு 1000 பேர் பலி!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு


THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 256
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 8 ஷஃபான் 23 ஞாயிற்றுக்கிழமை (25-10-70)




பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.

கேட்டு வாங்குங்கள்
சங்கு மார்க்
பித்தளை பிணைச்சல்கள்
இரண்டுபக்கமும் தறையப்பட்டது
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

டாக்கா, அக் 24

கிழக்குப் பாகிஸ்தானில் நேற்று ஏற்பட்ட பயங்கர சூறுவளிக்கு ஆயிரம்பேர்பலி கொள்ளப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தகவல் தொடர்புகள் முற்றாக பாதிக்கப்பட்டு விட்டதால் ஊர்ஜிதமான தகவல்கல் எதுவும் கிடைக்கவில்லை.

மணிக்கு 150 கிலோமீட்டர் வேகத்தில் சூறுவளி 10 மணிநேரம் தொடர்ந்து வீசியது.

கல்கத்தாவில் புயலில்6பேர் மாண்டதாகவும், 50 பேர் படுகாய மடைந்ததாகவும், 500வீடுகள் இடிந்து விழுந்து விட்டதாகவும் அறிவிக்கப் படுகிறது.

## வடக்கில் தொகுதிவாரியாக சுதந்திரக்கட்சிக் கிளை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடக்கில் சுதந்திரக் கட்சி வேலைகளைதீவிரமாக்கவும், தொகுதிவாரியாக அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்குபகுதிகளில், கட்சி வேலைக்கு பொறுப்பாகவுள்ள தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர், வடக்கில் 8 தொகுதிகளுக்கு அமைப்பாளர்களை நியமித்திருக்கிறார் என்றும் மற்றும் 5 தொகுதிகளுக்கு அமைப்பாளர்கள் விரைவில் நியமிக்கப்படுவார்கள் என்றும் தெரிய வருகிறது.

ஒவ்வொரு அமைப்பாளரும் தமது தொகுதிதவிர்ந்த ஏனைய தொகுதிவேலைகளில் தலையிடக்கூடாதெனவும், திரு. குமாரசூரியர், தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

வடபகுதியைச் சேர்ந்த சில சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள், மேலிடத்திற்கு செய்த புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைப்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதி அமைப்பாளர்கள் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணம்: திரு. ஏ. ரி. துரையப்பா, ஊர்காவற்றுறை: திரு. பி. கதிரவேலு, கோப்பாய் திரு. எம். துரைராஜா, உடுவில்: திரு. கே. விஜேதன், மன்னார்: திரு. என். எஸ். ஏ. காதர், சாவகச்சேரி; திரு. ச. இராமலிங்கம், பருத்தித்துறை: திரு. கே. எஸ். கணேசு, உடுப்பிட்டி: திரு. ஏ கணேசலிங்கம்.

கிளிநொச்சிக்கு திரு. கே. இலட்சுமணனையும், நல்லூருக்கு திரு. கந்தசாமியையும், வட்டுக்கோட்டைக்கு, திரு. எஸ். தேவராசனையும், அமைப்பாளர்களாக நியமிக்கும்படி, தொகுதிக் கிளைகள் மேலிடத்தை கோரியிருப்பதாகக் கூறப் படுகிறது. காங்கேசன்துறை வவுனியா தொகுதிகள் அமைப்பாளர் பற்றியும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது.

மந்திரி குமாரசூரியர் தலைமையில் இயங்கக்கூடிய வடபகுதி சுதந்திரக்கட்சி மத்தியகமிட்டி விரைவில் நிறுவப்படவிருக்கிறது.

# பட்ஜட் தினத்தை முன்னிட்டுஇன்று வங்கி விடுமுறை!

## வரலாற்றில் முதல் நிகழ்ச்சி

கொழும்பு, ஞாயிறு

மக்கள் அரசாங்கத்தின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் இன்று ஆட்சி மன்றத்தில் சமர்ப்பிப்பதை முன்னிட்டு இன்றைய தினத்தை விசேஷ வங்கிவிடுமுறைநாளாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இலங்கை வரலாற்றில் 'பட்ஜெட்' தினத்தன்று வங்கிகள் மூடப்படுவது இதுவே முதல்தடவையாகும்.

அரசாங்கம் நாட்டின் அபிவிருத்தித் தேவைகளுக்கு வங்கிகளின் பணத்தில் பெரும் தொகையை பயன்படுத்தலாம் என பொருளாதாரவட்டாரங்கள் கருத்துத்தெரிவித்துள்ளன. புதிய பட்ஜெட்டில் நிதிசம்பந்தமான அனேக சீர்திருத்தங்கள் ஏற்படலாம் என மேற்படி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

புதியபட்ஜெட்டில் மாதம் 100 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு வரி அதிகரிக்கப்படுமென்

நாட்டின் கைத்தொழில் வளத்தைப் பெருக்குமுகமாகநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்களினதும் யந்திர சாதனங்களினதும் இறக்குமதி வரியை அதிகரிக்கச் செய்யவும் இதன் மூலம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் புதிய பட்ஜெட்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

அதிகம் தேவையற்ற

லாம்என்றும் கூறப்படுகிறது

இவ்வித புதிய வரிகளை அமுல்நடத்துவதின்மூலமும் ஏற்கனவே உள்ள வரிகளை அதிகரிக்கச் செல்வதின் மூலமும் புதியபட்ஜெட்டில் துண்டுவிழுந்துள்ள தொகையின் அரைப்பகுதியைஏனும் நிவர்த்திசெய்யலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. வரி அறவிடுவதின் மூலம் தற்போது பெறப்படும் 60 வீதமான வருமானத்தை 80 வீதமாக அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளதா

## ஏழை மக்களுக்கு ஊக்கம் தரும் சோஷலிஸ பட்ஜட்?

கோட்டை, சனி

உத்தேச வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையை புதிய அரசாங்கம் எப்படி சமாளிக்கப் போகிறது என்ற விபரங்களை இன்று மாலையில் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அறிவிப்பார்.

அரசியல் வட்டாரங்களில் மாத்திரமின்றி, நாட்டின் பல்வேறு தரப்புகளையும் சேர்ந்த மக்கள் அனைவரும் டாக்டர் பெரேராவின் புதிய யோசனைகள் பற்றிய விபரங்களை தெரிந்துகொள்வதில் பெரிதும் ஆவலாய் இருக்கிறார்கள்.

நாட்டுக்குத் தேவையான வருமானத்தைத் தேடிக் கொள்வதற்காக டாக்டர் பெரேராவின்புதியயோசனைகள் புரட்சிகரமாகவிருக்கும் என்றே பொதுவாகக்கருதப் படுகின்றது. நாட்டை சோஷலிஸ வழியில்

பெரிய செல்வந்தர்களையும், பெரிய வருமானம் உள்ளவர்களையுமே டாக்டர் பெரேராவின் புதிய யோசனைகள் பாதிப்பதாய் அமையக்கூடும் என்று கருதப்படுகின்றது. ஆடம்பரப் பொருட்கள் மீதும், சாதாரணமக்களுக்கு அத்தியாவசியமில்லாத பொருட்கள்மீதும் பெரிய அளவில் வரிகள் விதிக்கப்படலாம். அதேசமயம் சிறுகைத் தொழிலாளர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், ஊக்கமளிக்கும் அம்சங்கள்நிறைய இடம்பெறும் என்றும், தனியார்துறைகளில் தொழில் புரியும் ஊழியர்களுக்கு சலுகைகள் அளிக்கப்படலாம் என்றும் கருதப்படுகின்றது.

புதிதாக எம்மாதிரி பொருட்களுக்கு புதிய வரிகள் அறிவிக்கப்படும் என்பது பற்றியும் எம்மாதிரிப் பொருட்களுக்கு வரி சலுகையளிக்கப்படும் என்பதுபற்றியும் வர்த்தகர்கள் மத்தியில் பெரும் பரபரப்பு இருந்துவருகின்றது.

......

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர்சபை சுவீப் முடிவுகள் வருமாறு:-

முதல் பரிசு:

20 A 0346 86,830

இரண்டாம்பரிசு

25 N 0012 34,732

மூன்றாம் பரிசு

16 J 0485 8,683

தலா ரூபா 434,15 சதம் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 11 K 0135 | 09 C 0795 |
| 01 W 0405 | 02 H 0264 |
| 15 T 0208 | 20 C 0140 |
| 24 Z 0495 | 05 M 0399 |
| 18 S 0326 | 19 C 0199 |
| 13 H 0137 | 14 O 0803 |
| 02 R 0541 | 24 Q 0232 |

## ஐக்கியத்தை கட்டிக்காப்பதே எம்முள்ள முக்கிய பணி

### நெல்லியடியில் உதவிகல்வி அமைச்சர்

உடுப்பிட்டி. புலோலி சனி

''எனது வடபகுதி விஜயத்தின்போது பல இடங்களிலும் சிங்களம் படிப்பதற்கு ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளனர் பெற்றோர் விரும்பிக் கேட்டால் சிங்கள ஆசிரியர்களை இங்கு அனுப்பிவைக்கத்தயாராகவுள்ளேன். சிங்களவர் தமிழ்படிப்பதும், தமிழர் சிங்களம் படிப்ப

ரான எனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு மறக்கமுடியாது. தமிழரான தபால் தந்தியமைச்சர் திரு. குமாரசூரியருக்குக் கம்புறுப்பிட்டியா தொகுதியில் சிங்கள மக்களால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. வடக்குத் தெற்கு என்றோ, தமிழர் சிங்களவரென்றோ பிரித்துப் பேசுவதால் பிரயோசனமில்லையென்பதை நாட்டு மக்கள் உணர்ந்துவருகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்காக டாக்டர் பெரேராவின்புதியயோசனை கள் புரட்சிகரமாகவிருக்கும் என்றே பொதுவாகக்கருதப் படுகின்றது. நாட்டை சோஷலிஸ வழியில் கொண்டுசெல்லும் புதிய அம்சங்களைக் கொண்டதாக இந்த வரவுசெலவுத்திட்டம் அமையும் என்று பொது வாக எதிர்பார்க்கப்படுகின் றது.

புதிதாக எம்மாதிரி பொருட்களுக்கு புதிய வரிகள் அறிவிக்கப்படும் என்பது பற்றியும் எம்மாதிரிப் பொருட்களுக்கு வரி சலுகை யளிக்கப்படும் என்பதுபற்றியும் வர்த்தகர்கள் மத்தியில் பல்வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

மொத்த விற்பனவுகளில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் ... ஏற்படலாம் என மேற்படி வட்டாரங்கள் எதிர்பார்க்கின்றன.

புதியபட்ஜெட்டில் மாதம் 100 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கு வரி அதிகரிக்கப்படுமென்று 500 ரூபாவுக்கு குறைந்த ஊதியம் பெறுபவர்களுக்கு வரி குறைக்கப்படுமென்றும், பெரும் தொகையான வருமானம் பெறுபவர்களின் வருமானம் கட்டுப்படுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந் நாட்டுப் பிரஜைகளல்லாதோரின் விசாவரி மீண்டும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவதானிகள் கருத்துத்தெரிவித்தனர்

... குமதி செய்யப்படும் ... பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தவும் புதிய பட்ஜெட்டின் நடவடிக்கை எடுக்கப்பட்டுக்கப்பட்டுள்ள தாகவும் தெரிகிறது.

அதிகம் தேவையற்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கு வரிவிதிக்கப்பட ... அரசாங்கம் எதிர்பார்க்கிறது. வரி அறவிடுவதின் மூலம் தற்போது பெறப்படும் 60 வீதமான வருமானத்தை 80 வீதமாக அதிகரிக்கச் செய்யப்பட்டுள்ளதாவும் தெரிகிறது. (சி பி.ஏ.

பள்ளி சிறுமி ராஜேஸ்வரி மரணம்

## விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

கில்னர் ஒழுங்கை பாடசாலை மாணவி நாகேஸ்வரியின் மரணம் சம்பந்தமான விசாரணை நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. டயஸ் முன்னிலையில் நடைபெற்றது.

பொன்னர் முருகேசு, சாட்சியமளித்தார். சந்தேகநபரான ஆசிரியை ஞேஸ் சக்கிரியாஸ் கோர்ட்டில் ஆஜராகியிருந்தார்.

சந்தேகநபர் சார்பில்புறக்டர் ஜிம்மி ராஜரத்தினம் ஆஜரானுர். மரணமானசிறுமியின் நலனைக் கவனிக்க புறக்டர் வி. ஏ. ஈ பாலசிங்கத்தின் அனுசரணையுடன், அட்வகேட் எஸ். நாகராஜா ஆஜரானுர்.

வேலைக்கார சிறுமியான மீனுட்சி கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார். சிறுமியின் பெற்ரூேர் கோர்ட்டிற்கு வரவில்லையெனத்தெரிவிக்கப்பட்டது.

மாஜிஸ்திரேட் மீனுட்சியை இரட்சணியசேனையில் இருக்கும்படி உத்தரவிட்டு விசாரணையை அடுத்தமாதம் 20ம்திகதிக்கு ஒத்திவைத்தார்.

## தம்பதிகளாய் வாழ்ந்த அண்ணனும் தங்கையும்!

கொழும்பு சனி

உடன்பிறந்த அண்ணனும் தங்கையும் திருமணம் செய்துகொண்டு, தாம்பத்திய வாழ்க்கை நடத்திய சம்பவம் குறிப்பிட்ட தங்கையின் மரண விசாரணையின்போதுதெரியவந்துள்ளது. இத்தம்பதிகளுக்கு ஒரு குழந்தையுமிருக்கிறது.

கொழும்பில் குடும்பம் நடத்திவந்த இத்தம்பதிகளின் சொந்தஊர் அனுராதபுரத்திலுள்ள வடகம என்னுமிடமாகும் வறுமை காரணமாக இவர்கள்இருவரும் அநாதைகளாக வெவ்வேறு இடங்களில் தனித்தனியாக சிறு பிராயத்திலிருந்தே வாழ்ந்து வந்தனர்.

தமையனை திரு. கே ஜெயசிங்க பாணந்துறையிலுள்ள ஒரு வீட்டிலும் சோதரி மல்லிகா ஜெயசிங்க நீர்கொழும்பிலும் வாழ்ந்தனர். திரு ஜெயசிங்க ஒரு ஆசிரியராவர் இவர்களிருவரும் விவாகம் செய்துகொண்டபோது, தங்களது உறவுமுறை பற்றிதெரியாதவர்களாய் இருந்ததாகவும் மரண விசாரணையின் போது தெரியவந்தது. இவரது தாயார் உயிருடன் இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

தற்கொலை செய்துகொண்ட பிரஸ்தாப பெண்ணின் மரணவிசாரணையில் இவர்களின் உறவினர்கள் பற்றிய விபரம் மரணவிசாரணை அதிகாரியால் சேகரிக்கப்பட்டபோதே இவர்கள் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற உண்மை தெரியவந்தது (சி.பி.ஏ.)

## தேர் எரிப்பு வழக்கு

மாவிட்டபுரம், சனி

மாவிட்டபுரம் தேர் எரிப்பு வழக்கு அடுத்தமாதம் 10ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் தேர்களை எரித்து நாசம் விளைவித்தது, எஸ் சண்முகவடிவேல் என்பவரை அடித்துக் காயம் விளைவித்தது உட்பட 5 குற்றச்சாட்டின் மீது எஸ் ரி. என். நாகரத்தினம், மகேஸ்வரன், இராசையா ஆகியோர் இவ் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர்.

இவ்வழக்கு நேற்று மல்லாகம் மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிதரப்பு வழக்கறிஞரால் 1ம் எதிரி சுகவீனம் காரணமாக சமூகமளிக்க வில்லை என தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து வழக்கு ஒத்திப் போடப்பட்டது.

| | |
|---|---|
| 11 K 0135 | 09 C 0795 |
| 01 W 0405 | 02 H 0264 |
| 15 T 0208 | 20 C 0140 |
| 24 Z 0495 | 05 M 0399 |
| 18 S 0326 | 19 C 0199 |
| 13 H 0137 | 14 O 0803 |
| 02 R 0541 | 21 Q 0232 |
| 34 H 0518 | 09 R 0927 |
| 18 U 0082 | 27 M 0995 |
| 25 A 0157 | 18 V 0150 |
| 14 G 0606 | 14 Y 0631 |
| 11 K 0766 | 7 W 0607 |
| 28 W 0608 | 13 D 0292 |
| 12 C 0456 | 09 N 0927 |
| 21 L 0911 | 28 U 0398 |
| 13 J 0866 | 34 B 0577 |
| 10 B 0741 | 35 F 0978 |
| 09 A 0129 | 27 K 0558 |
| 29 E 0063 | 18 J 0494 |
| 14 M 0137 | 22 F 0511 |
| 25 C 0302 | 19 O 0291 |
| 05 Y 0008 | 15 V 0305 |
| 17 Y 0387 | 19 A 0489 |
| 24 M 0638 | 12 R 0850 |
| 34 H 0014 | 29 U 0281 |
| 07 F 0830 | 03 L 0522 |
| 25 F 0022 | 10 F 0937 |
| 19 G 0372 | 18 L 0256 |
| 07 E 0171 | 27 M 0052 |
| 20 W 0601 | 26 V 0055 |
| 04 R 0452 | 28 H 0401 |
| 26 R 0212 | 36 A 0256 |
| 18 Y 0086 | 27 S 0130 |
| 29 Z 0582 | 16 B 0075 |
| 20 Y 0414 | 06 Z 0889 |
| 05 L 0661 | 28 Y 0342 |
| 18 Y 0711 | 10 D 0674 |
| 36 O 0556 | 12 M 0116 |
| 23 B 0639 | 34 U 0405 |
| 16 B 0295 | 14 R 0078 |
| 01 X 0452 | 32 K 0920 |
| 14 S 0032 | 10 Y 0873 |
| 26 E 0152 | 30 J 0076 |
| 20 C 0994 | 25 W 0092 |
| 14 R 0258 | 18 X 0741 |
| 33 V 0264 | 24 C 0844 |
| 34 C 0663 | 20 Y 0392 |
| 17 S 0870 | 36 A 0321 |
| 13 K 0961 | 29 E 0667 |
| 11 R 0555 | 14 D 0514 |

(இவையாவும் உறுதிபடுத்தப்படவேண்டும்)

## அவசரகால பாஸ்போட் யாருடையது?

திருமதி கிருஷ்ணலீலா ராஜகுலசிங்கத்தின் அவசரகால பாஸ்போட் ஒன்று கச்சேரிக்கண்மையில் நாரந்தனையைச் சேர்ந்த அலிஸ்ரன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும்.

ஈழநாடு ஆதரவில்

## தீபாவளிவிழா

முழுவிபரமும் நாளை

வெளிவரும்.

### தமிழ் பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம்

கொழும்பு திங்கள்

ஆசிரியர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் பட்டதாரிகளுக்கு நேற்று கல்வி அமைச்சு நியமனக்கடிதங்களை தபாலில் அனுப்பி வைத்துள்ளது 103 தமிழ் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் பெறுகிறுர்கள்

### மன்னுர் தேர்தல் ஆட்சேபவழக்கு

மன்னுர் தேர்தல் ஆட்சேப வழக்கு காலை விசாரணை 2ம் பக்கத்திலும் நண்பகல் விசாரணை 4ம் பக்கத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன

பருத்தித்துறைப் பொலிஸ்

## மூவரைக் கைது செய்து இரவில் விடுவித்தனர்

(உடுப்பிட்டி-புலோலி நிருபர்கள்)

உதவிக் கல்வியமைச்சர் திரு. ஈ, வை, துடாவையின் கரவெட்டி விஜயத்தை முன்னிட்டுப் பருத்தித்துறைப் பொலிஸார் நெல்லியடியைச் சேர்ந்த இரு வாலிபர்களையும் வயோதிபரொருவரையும் நேற்று முன்தினம் காலை கைது செய்து உதவியமைச்சரின் இப்பகுதி விஜயம் முடிந்ததும் இரவ 10-30 மணியளவில் விடுவித்தனர்.

இம் மூவரும் அமைச்சர் விஜயத்தின் போது குழப்பம் மேற்படுத்தக் கூடும் என்று பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலைத் தொடர்ந்து பொலிஸார் இந்நடவடிக்கையை மேற்கொண்டனராம்.

இம் மூன்று நபர்களும் காரணமின்றிப் பொலிஸார் தம்மைக்கைது செய்து தாக்கியதாகவும் அவமானத்தை ஏற்படுத்தியதாகவும் புகார் செய்துள்ளனர். பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்களில் அரசாங்க ஊழியர் ஒருவரும் இருக்கிருர் அவர் சேவைக்குச் செல்லும் போது பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டதாகவும் மற்றவர் ஒருமாணவரென்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபருக்கு இம்மூவரும் புகார்தெரிவித்துள்ளனர்.

ந. ச. தலைவரை ஏசிஞராம்

## உறுப்பினர் சபைக்குவர ஒருமாதம் தடை!

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி நகரசபைத் தலைவரை நகரசபைமாதாந்தக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது தகாதவார்த்தைகளால் பேசியதாகக் கூறப்படும் ஓர் அங்கத்தவருக்கு நகரசபை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதற்கு ஒரு மாத காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த 21-ம்திகதிதலைவர் திரு. சு. கனகரத்தினம் தலைமையில் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது 9-ம் வட்டார அங்கத்தவர் திரு. க. மயில்வாகனம் தலைவரைப் பார்த்து தகாதவார்த்தைகளால் ஏசிஞராம் இதைத் தொடர்ந்து 11-ம்வட்டார அங்கத்தவர் திரு. வே, கனகசப குறிப்பிட்ட அங்கத்தவரை ஒருமாத காலத்துககு சபைக்கு பிரசன்னமளிக்கவிடப்படாதென்ற பிரேரணையை சபையில் கொண்டுவந்தார் இதை 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. செ. சிவப்பிரகாசம் ஆமோதித்தார் சபை இப்பிரேரணையைஏற்றுக் கொண்டுஒருமாதகால தடையுத்தரவுபிறப்பித்தது.

... அனுப்பி வைக்குமாறு கோரியுள்ளனர் பெற்றேர் விரும்பிக் கேட்டால் சிங்கள ஆசிரியர்களை இங்கு அனுப்பிவைக்கத்தயாராகவுள்ளேன். சிங்களவர் தமிழ்படிப்பதும், தமிழர் சிங்களம் படிப்பதுமே இந்நாட்டுப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஒரே வழி''

உதவி கல்வியமைச்சர் திரு பி வை துடாவ வடமராட்சிக் கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனத்தால் தமக்கு அளிக்கப்பட்ட மகத்தான வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் இவ்வாறு கூறினுர்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கில் வழக்கறிஞர் திரு. சிவாபாலேந்திரன் தலைமையில் இவ்வரவேற்பு விழா நடைபெற்றது. திரு. துடாவை தொடர்ந்து பேசுகையில்,

'எம்மைப் பொறுத்தவரையிலும் எமது கட்சியைப் பொறுத்தவரையிலும் யாருக்கும் நாம் பயப்படவில்லை. எங்கும் கூட்டம்வைத்து எமது கொள்கைகளைப் பிரசாரம் செய்வோம். உங்கள் மத்தியில் சிங்கள அமைச்ச ... ளால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. வடக்குதெற்கு என்ருே, தமிழர் சிங்களவரென்ருே பிரித்துப் பேசுவதால் பிரயோசனமில்லையென்பதை நாட்டு மக்கள் உணர்ந்துவருகின்றனர்' என்ருர்.

நாமனைவரும் ஒரே குடும்பத்தவர்கள். சகோதரத்துவம், ஐக்கியத்தைக்கட்டிக் காப்பதே எம்முன்னுள்ள பணி, உலகில் வேறெந்த அரசாங்கமும் இத்தகைய பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிசெய்யவில்லை. நாட்டிலுள்ள சாதாரணமக்கள் சோஷலிஸத் திட்டங்களில் எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார்களென்பதை இதிலிருந்து அறியமுடிகின்றது என்று அவர் மேலும் சொன்னுர்.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதியான உடுப்பிட்டி எம். பி. திரு. கே. ஜெயக்கொடி வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் நியமன எம். பி. திரு. எம். ஸி. சுப்பிரமணியம் உட்பட வேறுபலரும் பேசினர்.

## சோமவீர வருகிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலாச்சார அமைச்சின் உதவி அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறி இம் மாதம் 28ம் திகதி யாழ்ப்பாணம் வருகிருர்.

யாழ் பொலிசாரதும், நாகவிகாரை பௌத்த குருவினதும் விசேஷ அழைப்பையேற்று உதவி அமைச்சர் இங்கு வருகிருர்.


## திருமண அழைப்பு

பரமேஸ்வரன் — வல்லபாம்பிகை

நிகழும் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 9-ம் நாள் (26-10-70) திங்கட்கிழமை காலை 10 மணிக்கும் 11 மணிக்கும் இடையிலுள்ள சுபநேரத்தில்,

சுளிபுரம்
திருநிறை செல்வன்
பரமேஸ்வரன்
அவர்களுக்கும்

எங்கள் புதல்வி
திருநிறை செல்வி
வல்லபாம்பிகை
அவர்களுக்கும்

''அம்பிகை வாசம்'', உடுவிலில் நடைபெற இருக்கும் திருமணவைபவத்திலும், மறுநாள் மாலை நடைபெறும் வரவேற்பு உபசாரத்திலும் பங்குபற்றுமாறு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் வேண்டிய அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பு அனுப்பமுடியவில்லை,

இளைப்பாறிய அதிபர் சி, சுப்பிரமணிய ஐயர்,
முருகமூர்த்தி வித்தியாசாலை சு, யோகாம்பிகை அம்மா
உடுவில், சுன்னகம். 2527



சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

ONE-DOLLAR

டொலர் அலுமினியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்


### தேவை

தையற்கலையில் அனுபவமிக்க பெண்கள் தேவை. பிறஸ்ஸியர்ஸ் தைப்பதில் திறமை மிகுந்தவர்கள் விரும்பத்தக்கது. கடித மூலம் தொடர்புகொள்க. 1-11-70க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். N. லோகநாதன், 24/1 பெரியகடை, யாழ்ப்பாணம். 2362

பேக்கரியில் வேலை செய்வதற்கு அனுபவமுள்ள ஆள் தேவை. கீழ்க்காணும் விலாசத்திற்கு நேர்முகமாகத் தொடர்பு கொள்ளவும். ஆ. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2361

எமது யாழ்ப்பாண கிளை நிலையத்தில் வேலை பார்ப்பதற்கு தகுதி வாய்ந்த பெண் கணக்காளர் தேவை. விண்ணப்பிக்கவும். முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. ஜபார்ஜி பிறதர்ஸ், இல.6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2360


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு 25—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 சித்திரம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-10 பேச்சு, 6-15 வயலின், 6 30 விவசாய நிகழ்ச்சி, 6-45 கண்ணகிவழக்குரை, 7-00 திரைகானம், 7-15 பாட்டு, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கவிதை நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## கயரோகத்தடுப்பு நடவடிக்கை

புதுக்குடியிருப்பு, சனி

கயரோக தடுப்புப் பகுதியினர் புதுக்குடியிருப்பில் கயரோக தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி கயரோக தடுப்புப் பகுதியின் குழுவொன்று இப் பகுதி வைத்தியசாலையில் தங்கிநின்று இப்பகுதி மக்களை எக்ஸ்ரே எடுத்து வருகிறது.

## கந்தசட்டி விழா

சுழிபுரம், சனி

பண்ணாகம் விசவத்தனை முருக மூர்த்தி கோவிலில் கந்தசட்டி விழா இம்முறையும் சிறப்பாக நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.


**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
நாகேஷ்— கே. ஆர். விஜயா நடித்த
**யாருக்காக அழுதான்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில்4 காட்சிகள்
மனோஜ் குமார் - மலாசின்கா நடித்த
**சுகாக் கின்டூர்**
(ஹிந்தி)

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
திலிப்குமார் - வைஜந்திமாலா நடித்த
**மதுமதி**
(ஹிந்தி)

**REGAL**
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Poya days 4 Shows
James Stewart,
Raquel Welch
in
BANDOLERO

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 &9-45 p m
Poya, Pre-poya 4 Shows
Noelwillman
in
THE REPTILE

**ராணி** (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர்—லட்சுமி ஜெயலலிதா — அசோகன்


## மன்னார் தேர்தல் ஆட்சேபக வழக்கு

# 'பெற்றோல் செட்டில் ஆரம்பத்தில் 90 ரூபா சம்பளம் தந்தார்கள்'

# சதக்கத்துல்லா சாட்சியம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பெட்ரோல் செட்டில் சேருமுன் நான் மரைக்காரின் சிகரெட் கம்பனியில் வேலைசெய்தேன். 60 ரூபாவும் சாப்பாடும் தந்தார்கள். அதற்குமுன் மாங்குளத்தில் வேலை செய்தேன். 65 ரூபா சம்பளம் தந்தார்கள். பெற்றோல் செட்டில் ஆரம்பத்தில் 90 ரூபா சம்பளம் தந்தார்கள். அதற்குப்பின் சம்பள உயர்வு கிடைத்தது பின் 118 ரூபா சம்பளமாகக் கிடைத்தது. அதன் பின்பும் சம்பள உயர்வு கிடைத்தது.

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில் எதிர்மனுதாரின் வழக்கறிஞர் எச். டி. தம்பையா குறுக்குவிசாரணை செய்கையில் சாட்சியமளித்த சலீம் மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு யாழ்ப்பாணத்தில் நீதியரசர் வின்செண்ட் தாமோதரம் முன்னிலையில் நேற்று எட்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

சலீம் மேலும் கூறியதாவது:-

எனது சம்பளம் 121 ரூபாதான். பம்பரின் வேலையை செய்வதானால் 80 ரூபா கிடைத்தது இது குறையவும் கூடும், கூடவும் வரும்.

வழ: அஜிஸ் மரைக்கார் நோட்டீஸ் தந்தது பொய் என்கிறேன்?- இல்லை

மனுதார்சார்பில் ஆஜரான அட்வகேட் குரூசட் தம்பையா மறுவிசாரணை செய்தபோது சலீம் கூறியதாவது. மக்களுக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணம்செய்பவனே என நோட்டீசில் கூறப்பட்டிருப்பது அழகக்கோனை குறிப்பிடுவதாகவும் நோட்டீசில் பெரிய எழுத்தில் இருப்பது 'சுரண்டித்தின்னும் பேர்வழி' என்பதாகும். என் அர்த்தத்தின்படி கூடாதவர் மக்களிடம் தட்டிப் பறித்து சீவிப்பவர் என்பதாகும். மக்களிடம் கைலஞ்சம் வாங்குபவர் எனக் குறிப்பிடுவதாகும் இந்த நோட்டீசை வாசிக்கு முன்பே 'சுரண்டித்தின்னும்' என்ற வார்த்தையை எனது கிராமத்தில் கேள்விப்பட்டிருக்கிறேன்.

வழ: சத்தியக் கடுதாசியிலுள்ள விபரங்களை யாரிடம் சொன்னீர்?- ரஹிமிடம்.

வழ: வேறு யாருக்கும் சொன்னீரா?- புறக்டர் தாகிருக்கும் சொன்னேன்.

வழ: நோட்டீஸ் தந்தது யார்என்றீர்? அஸிஸ் மரைக்கார் என்று.

வழ: எந்த அசிஸ் மரைக்கார் என்று கேட்டீரா?- ஆம்.

வழ: சத்தியக்கடுதாசியில் கையெழுத்திடுமுன் வாசித்து விளக்கிக் கூறப்பட்டது? ஆம்.

வழ; கே. அசிஸ் மரைக்கார் என்றிருந்ததா?—ஆம்.

வழ: கடந்த தேர்தலில் வாக்களித்தீரா? ஆம்

வழ: மனுதார் எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்?- ஐக்கிய தேசியக்கட்சி

வழ: என்ன சின்னம்?- யானை.

வழ: அழகக்கோனின் சின்னம் என்ன?- வீடு

காதர் சசீப் சதக்கத்துல்லா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

கடந்த தேர்தலில் நான் வாக்களித்தேன். நோட்டீஸ் ஒன்றைப் பார்த்திருக்கிறேன். மே22-ம் தேதிபார்த்தேன், அஸிஸ் மரைக்கார் என்வீட்டில் காட்டினார். அப்போது அவர் நான்தான் நோட்டீசை அச்சடித்தேன்; நன்றாக வாசியும் என்றுகூறிவிட்டுச் சென்றார். கதைத்தபோது தனியத்தான் வந்தார். என்னுடன் மனைவி பிள்ளைகள் இருந்தார்கள். நோட்டீஸ் ஒன்று தந்தார். அவர் அடுத்த வீட்டிற்குப் போனதைக்கண்டேன். நான் அவர் பின்னால் சென்று கடைக்குப் போனேன். அவரிடம் வேறு நோட்டீஸுகள் இருந்தன. நான் நோட்டீசை பின்பு வாசித்தேன். மனுதார் ரஸிமை எனக்குத் தெரியும். அவருக்கு அறிவிக்கவில்லை. இவ் வழக்கில் சத்தியக் கடுதாசி முடித்தேன்.

இக்கட்டத்தில் கோர்டிற்கு அசிஸ் மரைக்கார் கூட்டிவரப்பட்டார்)

வழ: இவருடைய பெயர் என்ன?- அசிஸ் மரைக்கார்.

வழ: உங்கள் சாட்சியில் சொன்னது இவர் தானா?- ஆம்.

வழ: அதற்கு முன்பாகவும் அவரை தெரியுமா?- ஆம்.

வழ: கட்டளை கிடைத்ததா?- ஆம்.

வழ: யார் சத்தியக்கடுதாசிக்கு கையெழுத்து போடும்படி கேட்டது?- புறக்டர் தகீர்.

வழ: யார்மூலம் போனீர்?- அக்பார் மூலம்.

வழ: அக்பார் யார்?- ரஹீமின் தம்பி.

வழ: ரஹீமை சந்தித்தபோது என்ன கேட்டார்?- குடியிருப்பில் அஸிஸ் மரைக்கார்நோட்டீஸ்குடுத்தாராம் உமக்கும் தந்தாரா என்றார்.

வழ: நீர் என்ன சொன்னீர்?- எனக்கும் தந்தார் என்றேன்.

வழ: ரஹீமும் நீரும் கதைத்த தேதி எப்ப என்று சொல்ல முடியுமா?- தேர்தல் முடிந்த பின்பு.

(விசாரணை தேநீர் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.)

## மகாஜன அமோக வெற்றி

சுழிபுரம், சனி

சுழிபுரம் விக்ரோறியக் கல்லூரி மூன்றும் பிரிவு உதைபந்தாட்ட கோஷ்டிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மூன்றும் பிரிவு கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கோஷ்டியினர் நாலு கோல்களைப் போட்டு வெற்றி பெற்றனர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி கோஷ்டியினர் கோல்எதுவும் போடவில்லை. போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மேற்படி கல்லூரியின் இரண்டாம் பிரிவு கோஷ்டியினருக்கிடையே நடைபெற்ற போட்டியில் மகாஜனக் கல்லூரியினர் இரண்டு கோல்களைப்போட்டு வெற்றி பெற்றனர் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியினர் கோல்எதுவும் போடவில்லை திரு. எஸ். கணேசலிங்கம் மத்தியஸ்தராககடமையாற்றினார்.

## வெற்றி

மாவிட்டபுரம், சனி

காங்கேசன் துறை யுனைட்டட் விளையாட்டுக்

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 8-ம் திகதி

## அனுராலண்டன் பயணம்

கோட்டை, சனி

பிரதமரின் புத்திரன் திரு அனுரா பண்டாரநாயக்கா நேற்று லண்டன் பயணமானார். அங்கு இவர் லண்டன் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பெறுவார்.

## வெற்றி

தாழையடி, சனி

வல்வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தாரால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கடந்த சனி மாலை வல்வெட்டித்துறை சைனிங் ஸ்ரார் கோஷ்டியும் வல்வெட்டித்துறை உதயசூரியன் கோஷ்டியும் கலந்து கொண்ட போட்டியில் சைனிங் ஸ்டார் 1-0 கோலால் வெற்றி பெற்றது. போட்டிக்கு திரு. இரத்தினசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## வெற்றிதோல்வி இன்றி முடிந்தது

திருநெல்வேலி, சனி

யாழ் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்று வரும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளின் 'பி' பிரிவுகளுக்கிடையேயான போட்டிகளில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியும் கொக்குவில்இந்துக்கல்லூரியும் பரமேஸ்வராக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மோதிக் கொண்டன. இரு பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் பரமேஸ்வராக் கல்லூரி வீரர்களின் உற்சாகமான விளையாட்டு கொக்குவில் இந்துக்கல்லூரி வீரர்களின் முயற்சிகளையெல்லாம் முறியடித்தது.

இறுதியில் கொக்குவில் கோஷ்டியினர் ஒரு கோலைப் போட்டு 1—1 கோல்களுடன் சரிசமமாக முடிவுற்றது.

இரண்டாம் பிரிவுகளுக்கிடையே நடைபெற்ற போட்டியும் 1—1 கோல்களுடன் சமமாக முடிவுற்றது.

## புதிய நூல்நிலையம்

சுழிபுரம், சனி

சுழிபுரம் பத்திர காளி அம்மன் கோவிலுக்கு முன்பாக சுழிபுரம்சனசமூக நிலையத்தாரால் புதிய நூல் நிலையம் ஒன்று கட்டப்படவிருக்கிறது, சுழிபுரம் கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி இதற்கான அடி கல்லை நேற்று நாட்டி வைத்தார்.

## அடிக்கல் நாட்டினார்

தாவடி, சனி

'சோசலிஷ அடிப்படையில் சாதி மத பேதமின்றி இந் நாட்டின் கல்வித் தராதரத்தை மேன்மேலும் உயர்த்த முன்வாரீர்' என்று உதவிக் கல்வி அமைச்சர் திரு பி. வை. துடாவை சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவத்தின் போது உரையாற்றுகையில் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. பரம் தில்லைராஜா தலைமையில் இவ் வைபவம் நடந்தது.

இம் மகாவித்தியாலயத்துக்கு வேண்டிய வசதிகளை உதவுவதாக தொகுதி எம். பிக்கும் கல்வி அதிபதிக்கும் பழைய மாணவர் சங்கம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஆகியவற்றுக்கும் உதவி மந்திரி உறுதியளித்தார்.

தொகுதி எம். பி திரு. ஆ. தியாகராஜா பேசுகையில் மக்கள் அரசாங்கத்துக்கு நாம் ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

உதவி கல்வி அமைச்சரிடம், பழைய மாணவர் சங்கமும், பெற்றோர் ஆசிரிய சங்கமும் மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தன.

பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. எஸ். எஸ். குலநாயகம் நன்றி தெரிவித்துப் பேசினார்.

## புலோலி கி.ச. தேர்தல்

புலோலி, சனி

புலோலி கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் நவம்பர் மாதம் 5-ந்திகதி கிராம சபை அலுவலகத்தில் தேரிதல் அதிகாரி முன்தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இ. போ. ச. வில்

## மேலும் 1000 பேருக்கு வேலைவாய்ப்பு

கோட்டை, சனி

இலங்கை போக்குவரத்து சபை மேலும் 1000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க விருக்கிறது.

இந்தஇளைஞர்கள்வாகனங்கள் திருத்துபவர்களாகப் பயிற்றப்படுவார்கள்.


சண்முகநாதனுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தில் நாட்டம்
ஆகவே அவரை வெகு துரிதமாக லண்டனுக்கு அனுப்பி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கவிதை நிகழ்ச்சி, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

in

THE REPTILE


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-காஞ்சனு
நாகேஷ்-மஞ்சுளா
நடித்த

# சாந்தி நிலையம்

கடைசி 2 தினங்கள் மட்டும்

வெலிங்டன் யாழ் நகர்

(2-30, 6-30, 9-30) போயா தினங்களில் 4 காட்சிகள்

★ ஏ.வி.எம்.ராஜன்

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா

காஞ்சனு, முத்துராமன், சுந்தரராஜன்
நடித்த

# துலாபாரம்


(தமிழ்)

கெப்பிட்டல் (கொழும்பு)    பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

27-ந் திகதி முதல் வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் — சௌகார் ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


தராகக்கடமையாற்றினர்.

## வெற்றி

மாவிட்டபுரம், சனி காங்கேசன்துறை யுனைட்டட் விளையாட்டுக் கழகமும் மாவிட்டபுரம் யுனைட்டட் விளையாட்டுக் கழகமும் மோதிய ஒரு சுர பந்தாட்டப் போட்டியில் மாவிட்டபுரம் 2—0 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்துக்குமுன் இப் போட்டி நடைபெற்றது.

## வை. எம். சி. ஏ. இன்னிங்ஸால் வெற்றி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. கிரிக்கெட் கோஷ்டிக்கும், யாழ்ப்பாண கச்சேரி ஊழியர் கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான 'மென்பந்தாட்டக்' கிரிக்கெட் போட்டியில் வை. எம். சி. ஏ. கோஷ்டி இன்னிங்ஸால் வெற்றி பெற்றது.

இப்போட்டி யாழ், முனியப்பர் மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

## 'பி' பிரிவில் மானிப்பாய் முன்னணி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையுடன், மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனு கல்லூரிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில், மானிப்பாய் இந்து 1—0 கோலால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. சற்சிங்கராயர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இதுவரை நடைபெற்ற 'பி' பிரிவுப் போட்டிகளில் மானிப்பாய் கோஷ்டி தோல்வியடையாது முன்னணி வகிப்பது குறிப்பிடத்தக்கது.

## மகாஜனு வெற்றி

மேற்படி இரு கல்லூரிகளின் 'சி' பிரிவுக் கோஷ்டிகளிடையே நடைபெற்ற ஆட்டத்தில், மகாஜனுக் கல்லூரி 2—1 கோல்களால் வெற்றி பெற்றது. (தே. நி)

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 8-ம் திகதி (25-10-70)

மேஷம்- நினைத்தது நடக்கும். பந்துசனங்களின் கொண்டாட்டம் உண்டு. பிதாவழி மூலம் எதிர்பாராத பொருள்வரவு கிடைக்கலாம்.

ரிஷபம். அருளும் பொருளும் ஒன்று இணைந்துகிடைக்கும். தொழில்துறையில் ஏற்படும் போட்டியில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும்.

மிதுனம்- பண விடயத்தில் நல்ல மாறுதல்கள் ஏற்படும். எதிர்பாராத இடத்திலிருந்து அதிர்ஷ்ட இலாபமும் கிடைக்கலாம்.

கடகம்- கருடப் பார்வை உங்களை வட்டமிடும். எதிர்பாராதவகையில் பொருட்செலவுக்கு இடமுண்டு. அதிக சிந்தனைக்கு இடமுண்டு.

சிம்மம்- முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தை தடுப்பதற்கு எதிரிகள் முயற்சிசெய்வர். பொறுமை விரும்பத்தக்கது

கன்னி- சிக்கல்களை மேற்கொள்வதற்குச் சிறந்த நடவடிக்கைகளை எடுப்பீர்கள். குடும்பத்தில் பொறுப்புணர்ச்சி அதிகரிக்கலாம்

துலாம்- சுற்றுவட்டாரத்தில் சூழ்ச்சிகள் உருவாகும், வாயுப்பதார்த்தங்களை தவிர்ப்பதுடன் தெய்வநம்பிக்கை நன்மை தரும்.

விருட்சிகம்- நீண்டநாட்களின் பின்பு நிம்மதியான வாழ்க்கை இன்று கிடைக்கும். கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு. நல்லதினம்

தனுசு- அறிவுப் பசிக்கு இன்று தாராளமாக விருந்து கிடைக்கும். ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கும். படித்தவர்கள் ஆதரவும் உண்டு.

மகரம்- திகைக்கவைக்கும் திருப்பங்கள் ஏற்படும் சிலர் புனைந்துரைகளால் வேதனைப்படுவார்கள் மனத்திடம் வேண்டும்.

கும்பம்- கற்கண்டுபோல் இனிக்கும் வாழ்க்கை. காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு. களஸ்திரவழியின் முலம் கனதனம் சேரக்கூடும்.

மீனம்- பணத்தைக் கொடுத்து பகையைச் சமாளிப்பீர்கள், தொழில்துறையிலும் சோர்வு தென்படுகிறது.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


சண்முகநாதனுக்கு வெளிநாட்டு வர்த்தகத்தில் நாட்டம் ஆகவே அவரை வெகு துரிதமாக லண்டனுக்கு அனுப்பி வைத்தோம், பீ. ஓ. ஏ. சி. வி. சி. 10 விமானத்தில்.


எமது வி. சி 10 லண்டன் வர்த்தகத்துக்குத் துரித மார்க்கம் மட்டுமல்ல. சிறந்ததும் அதுவே. சண்முகநாதனைக் கேளுங்கள் சொல்வார்.

ஒய்யாரமாக உட்கார்ந்திருக்கக் கிடைத்த சாய்வு நாற்காலி; அன்பும் பண்பும் நிறைந்த பிரிட்டிஷ், மற்றும் ஆசியப் பெண்களின் உபசரிப்பு; தமது பிறீவ்கேஸ் காலடியில் இடரமல் பத்திரமாக இருக்க தலைக்கு மேலே நிலைப்பெட்டி இவை பற்றியெல்லாம் அவர் சொல்லுவார்.

ஆனால் விமானத்தின் பின்புறத்தில் இருந்த ரோள்ஸ் ரோய்ஸ் எஞ்சின்கள் பற்றி அவர் எதுவும் சொல்ல மாட்டார். — அவற்றின் சத்தத்தை அவர் கேட்கவேயில்லை.

வெள்ளைக்கார மற்றும் ஆசிய விமான ஊழியரின் உபசாரம், மேல்நாட்டு கீழ்நாட்டு உணவு வகையருக்கள் இவை எல்லாம் சண்முகநாதன் வாழ்நாளில் காணுத அனுபவம். அதில் திளைத்து மிகுந்த உற்சாகத்துடன் ஹீத்ரோ விமானத் தளத்தில் இறங்கினர், வியாபார முயற்சிக்குத் தயாராக.

சண்முகநாதனுக்கு மட்டும்தானு இந்த வாய்ப்பு. நீங்களும் அனுபவித்தால் என்ன?



BOAC

பீ. ஓ. ஏ. சீ. உங்களைக் கரிசனையுடன் உபசரிக்கிறது.

உங்கள் பிரயாண ஏஜெண்டுடன் கலந்தாலோசியுங்கள். அல்லது பீ.ஓ.ஏ.சி. க்கு போன் செய்யுங்கள் —27731/5

பிரிட்டிஷ் ஓவர்சீஸ் எயர்வேய்ஸ் கோர்ப்பரேசன்— எயர் சிலோன், குவான்டாஸ் ஆகியவற்றுடன் இணைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதிக்கப்போட்டியிலிருந்து ஐ. நா. விடுபட வேண்டும்

## மகாசபைக் கூட்டத்தில் இந்திராவின் காரமான பேச்சு



நியுயோர்க், அக். 24

ஐ. நா. சபையை ஆதிக்க அரசியலுக்கப்பால் வழி நடத்திச் செல்லவேண்டும். மண்டலசாரீபற்ற நாடுகளின் சக்தியைப்பலப்படுத்த வேண்டும் இன சமத்துவம் காலனி ஒழிப்பு ஆகியவற்றிற்காக ஐ நா. சபை பாடுபடவேண்டும்.

இவ்வாறு ஐ நா. சபையின் 25-வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் கலந்து பேசுகையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி குறிப்பிட்டார்.

திருமதி இந்திரா காந்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஐ. நா. சபை ஆதிக்க அரசுகளின் பிடியிலிருந்து விடுபட்டு அதற்கு அப்பாற்பட்டுச் செயல்படவேண்டும், சக்திவாய்ந்த நாடுகள் பல வகையிலும் அபிவிருத்தி அடையும் நாடுகளைப் பல வந்தப்படுத்தி வருகின்றன உலக நாடுகள் எல்லாம் சேர்ந்து ஐ. நா சபையின் பலத்தைப் பலப்படுத்த வேண்டும். உலகில் பூசல்களும் ஆயுத பலத்தினுல் வலுத்தாக்குதல்களும் நடைபெற்றுவருகின்றன தென்வியட்னும் மேற்காசியா போன்ற பிரச்னைகள் தீர்க்கப்படாவிட்டாலும், உலகில் பல இடங்களிலும் தோன்றிய வேறு சில பிரச்னைகளை இச்சபை தீர்த்திருக்கிறது தென்வியட்னுமின் பிரச்னைகள் தீர்க்கப்பட அங்குள்ள அந்நியத் துருப்புக்கள் எல்லாம் வெளியேறவேண்டும். முதலில் அங்கிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேற வேண்டும். உலக மக்கள் மத்தியிலுள்ள பொதுவான அடிப்படை சக்திகளை ஒன்றுதிரட்டிச் செயற்படுத்த சக்தியிழந்துபோனுல் வேறு சர்வதேச அரங்கை ஏற்ப வளத்திற்கு ஐ நா இப்படிய திட்டம் வாய்ப்பளிக்க வேண்டும். தொழில்நுட்பத் துறையில் காலனி ஆதிக்கம்பரவாமல் பாதுகாக்கப் படவேண்டும். படை குறைப்பு அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தங்களினுல் அணு ஆயுத உற்பத்தி குறையவில்லை. நீதி அமைதி ஆகியவற்றிற்காக நாம் தொடர்ந்து பாடுபடுவோமென்று கூறினுர்.

## பொலிஸ் நிலையம் வேண்டுமாம்

மட்டுவில், சனி

நாவற்குழி கிராமசபைப் பகுதிக்கு ஒரு தற்காலிக பொலிஸ் நிலையம் அமைக்கப்படவேண்டியது அவசியம் என்று நாவற்குழி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சடாச்சரம் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்திடம் மகஜர் மூலம் கோரியுள்ளர்' அந்த மகஜரின் நகல் ஒன்றை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினத்திற்கும் அனுப்பி வைத்திருக்கிருர்,

மோதிக்கொண்ட

## கப்பல்கள்இரண்டு ஆபத்தில்

லண்டன். அக் 24

ஆங்கிலக்கால்வாயில் இரண்டு கப்பல்கள் மோதிக்கொண்டதால் ஒரு கப்பல் தீப்பிடித்து எரிந்துகொண்டிருக்கின்றது. இக்கப்பல் மூழ்கிவிடக்கூடும் என்பதால் அதிலிருந்த பிரயாணிகளும் மாலுமிகளும் வெளியேறிக்கொண்டிருக்கிருர்கள். 29 பேர் மீட்கப்பட்டுள்ளனர். 14 பேரைக் காணவில்லையாம் இந்தக் கப்பலில்இருந்த நிபுணர் ஒருவரை மீட்பதற்காக ஹெலிகோப்டர் ஒன்று எரிந்துகொண்டிருக்கும் கப்பலில் இறங்கி அவரை மீட்டது.

மோதிக்கொண்ட மற்றக் கப்பலும் ஆபத்தான நிலைமையிலிருப்பதாகக் கூறப்படுகின்றது,

## முறையீடு

யாழ்ப்பாணம், வெள்ளி

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வடபகுதியில் தீவிரமாக வளர்வதை தடுப்பதில் ஈடுபட்டுள்ள சிலரைக் கண்காணித்து நடவடிக்கை எடுககுமாறு பிரதம மந்திரியிடமும் வடபகுதிஅரசாங்க அதிபரிடமும் வடபகுதி பொலிஸ் அதிபரிடமும் தாம் கேட்டுக்கொண்டுள்ளதாக வடபகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு துரைராசா தெரிவித்தார்.

குறிப்பிட்ட சில தொகுதிகளைச் சேர்ந்த குறிப்பாக மூவரின் பெயர்களைத்தாம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் சொன்னுர்.

(உடுவில், நிரு )

## 'மாதரின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்'

### லண்டன் மாநாட்டில் இலங்கை பெண்மணி

லண்டன், அக் 24

'உலகத்தில் வாழ்க்கைத் தரத்தை விருத்திசெய்ய வேண்டுமாயின் மாதர்களின் கருத்துக்கு எல்லாவகையிலும் மதிப்பளிக்கவேண்டும்' இவ்வாறு ஈழத்துத் தமிழ்ப் பெண்மணியான திருமதி. லோறல் காசிநாதர் லண்டனில் நடைபெற்ற சாம்ராஜ்ய லீக் மகாநாட்டில் உரை நிகழ்த்துகையில் கூறினுர். இங்கிலாந்திலுள்ள ஈழத்து மாதர் சங்கத்தை ஸ்தாபித்தவரான திருமதிகாசிநாதர் பெண் சமூகத்திற்கு எல்லாத் துறைகளிலும் சமத்துவம் அளிக்கப்படவேண்டுமென நீண்டகாலமாகப் போராடி வருகிருர்.

ஹேக் நகரில் சமீபத்தில் நடைபெற்ற உணவு விவசாய ஸ்தாபனத்தின் மகாநாட்டிலும் அவர்பங்குபற்றி உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதில் பெண்களின் பங்கு பற்றி எடுத்து விளக்கினுர். சர்வதேச மாதர் கூட்டணியின் ஆதரவின்கீழ் நடைபெற்ற இம்மகாநாட்டில் சொந்தக்கருத்துக்களை வெளியிடும் பூரண சுதந்திரம் அவருக்கு அளிக்கப்பட்டது 'இதனுல் தங்குதடையின்றி கருத்துக்களை பரிமாறிக்கொள்ள இம்மாநாட்டில் அரிய வாய்ப்பு ஏற்பட்டது' என அவர் கூறினுர்.

சகலதுறைகளிலும் பெண்களின் அந்தஸ்து உயர்த்தப்படவேண்டும் என்பதே திருமதி காசிநாதரின் இலட்சியமாகும். சாம்ராஜ்ய லீக்கின் உபதலைவர்களில் ஒருவராகவும் அவர் பணியாற்றி வருகிருர்.

## முள்ளிப்பற்று கி.ச.தேர்தல்

தாழையடி, சனி

8 வட்டாரங்களைக் கொண்ட முள்ளிப்பற்றுக் கிராமசபை தேர்தலுக்கான வேட்பாளர் நியமனப் பத்திரம் நவம்பர்மாதம் 3ம் திகதி முள்ளிப்பற்றுக்கிராம சபை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப் படுமென யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

## இப்படியும் ஒரு காரணம்

தாழையடி, சனி

இதுவரை காலமும் நடைபெற்றுவந்த யாழ்ப்பாணம்-ஆளியவளை, பருத்தித்துறை-ஆளியவளை, கிளிநொச்சி-ஆளியவளை பஸ் சேவைகள் தற்போது தாழையடிவரை மட்டுமேநடைபெறுகின்றன பஸ் சாரதிகளை காரணம் கேட்பதற்கு அண்மையில் மருதன் கேணி-ஆளியவளை வீதியில் பகிரங்க வேலைப் பகுதியினரால் கட்டப்பட்ட 3 மதவுகள் பூரணமாக வேலைமுடிக்கப் படாமையினுல் மேற்படி வீதியில் பஸ் ஓட்ட முடியாதெனக் கூறுகின்றனராம்.

இதனுல் முள்ளியான் கட்டைக்காடு, போக்கறப்பு, ஆளியவளை உடுத்துறை முதலிய கிராமத்திலுள்ள பல நூற்றுக்கணக்கான மக்களும் பாடசாலை பிள்ளைகளும் வியாபாரிகளும் பல மைல் தூரம் நடந்துவந்து மருதன்கேணிச் சந்தியில் பஸ் ஏறும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி உரிய அதிகாரிகளுடன் பொதுமக்கள் தொடர்பு கொண்டுள்ளனர்.

அமெரிக்க அதிபர்

## அமைதிப் போட்டிக்கு ரஷ்யாவை அழைக்கிருர்

நியுயோர்க், அக். 24

அமைதியை ஏற்படுத்தும் புதிய போட்டியொன்றில் அமெரிக்காவுடன் சேர்ந்து கொள்ளும்படி சோவியத் யூனியனை அமெரிக்க அதிபர் நிக்ஸன் கேட்டுக்கொண்டார்.

ஐ. நா. பொதுச்சபையில் 25-வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அதிபர் நிக்ஸன் மேலும் தெரிவித்ததாவது: உலகில் எல்லோருக்கும் பொதுவாகஇருக்கும் மனித வர்க்கத்தின் வறுமை, பிணி துன்பம் ஆகியவற்றை நீக்குவதற்கும் நாம் பாடுபடவேண்டியவர்களாக உள்ளோம். எல்லோருக்கும் பொதுவாக இருக்கும், அணு ஆயுதப்போட்டி, அணு ஆயுத உற்பத்தி ஆகியவற்றை நீக்கி, மிகமுக்கியமாகஉள்ள வர்த்தக வளர்ச்சிக்காக இருநாடுகளும் பாடுபடவேண்டும். மேற்காசியப் பிரச்னை தீர்வதற்கு சோவியத் யூனியன் அமெரிக்காவுடன் ஒத்துழைக்கவேண்டும். அதுமட்டுமல்லாமல் மேற்காசியாவில் போர் நிறுத்தம் தொடர்ந்தும் நீடிக்கவேண்டும் என்ருர்,

## சந்திரனுக்குச் செல்லும் ரஷ்ய கலம்

மாஸ்கோ, ஒக். 24

ரஷ்ய விஞ்ஞானிகள் ஸொண்ட்-8 என்ற தானுக இயங்கும் ரஷ்ய விண்வெளிக் கப்பலை சந்திரனை நோக்கி அனுப்பியுள்ளனர். இது பூமி, சந்திரன் ஆகியவற்றை வெவ்வேறு தொலைவிலிருந்து படங்களை எடுக்கக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கப்பலுடன் நிலையான ரேடியோ தொடர்பு கொள்ளப்படவிருக்கிறது.

ரஷ்யர்கள் 1964ல் ஸோண்ட்-1 கலத்தை வெள்ளிக் கிரகத்துக்கு அனுப்பினர். அது வெற்றி பெறவில்லை. ஸோண்ட்-2 செவ்வாய்க்கிரகத்தை நோக்கிச் சென்றது. வழியில் தவறிவிட்டது. ஸோண்ட்-3 ஆளில்லாத ஆய்வுத் திட்டத்தில் முதன் முதலாக வெற்றியைக் கண்டது. ஸோண்ட்-4 1968 மார்ச்சில் செலுத்தப்பட்டது அதே ஆண்டு ஸோண்ட்-5, ஸோண்ட்-6 இரண்டும் சந்திரனை வெற்றிகரமாக வட்டமிட்டன. இப்பொழுது அனுப்பப்பட்டுள்ள கலம் 27-ந் திகதி பூமிக்குத் திரும்பி வருமாம்.

## 8 லட்சம் பேருக்கு வேலை இல்லையாம்

மாவிட்டபுரம், சனி

''இன்று நாட்டின் பெரும் பிரச்சனையாக விளங்கும் பொருளாதாரத்தை சீர் செய்ய வேண்டுமானுல் இலங்கையை தாயகமாகக் கொண்ட அனைவரும் பாகுபாடு இல்லாமல் பலதுறைகளிலும் உற்பத்தியை பெருக்கி தன்னிறைவுள்ள ஒரு நாடாகத்திகழச்செய்ய வேண்டும்'' என தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் வாலிபர் இயக்க அரசியல் மாநாட்டில் கலந்துரையாற்றிய இலங்கைதேசியமாணவர்மன்றத்தலைவர் திரு, ராஜாகொளுரே கூறினுர்,

வாலிபர் இயக்கத்தின் தலைவர் திரு கே. தவஞானம் தலைமையில் நடந்த இம் மகாநாட்டில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''சென்ற 5 வருடத்தில்தான் நாட்டில் இளைஞர் பிரச்னையும்பொருளாதாரப் பிரச்னையும் பெரிதும் சீர்கெட்டது 1கோடி 50 லட்சம் மக்கள் வாழும்இலங்கையில் 8 லட்சம் பேர் வேலையற்று இருக்கிருர்கள் என்ருல் நாடு எப்படி முன்னேற முடியும் இந்த வேலையற்ற வாலிபர்களின் பிரச்னையை எதிர்த்துப் போராடக்கூடிய கட்சி கம்யூனிஸ்ட்கட்சிதான்.

நாம் தென் இலங்கையில் போராட்டம் நடாத்தி அங்குள்ள சிங்கள வேலையற்ற வாலிபர்களுக்கு மட்டும் வேலை வழங்கும்படி சோரவில்லை நாட்டில் உள்ள சகல இனரீதியில் இப்பிரச்னைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று கோரினும் சிங்களவர் தமிழர் என்று பேதம்காட்டி பிரச்னைகள் தீர்க்கப்பட்டால் மேலும்பிரச்னைகள்வளரவே அது வழிவகுக்கும்''

கம்யூனிஸ் வாலிபர் சங்கசம்மேளன உதவிச் செயலாளர் திரு. டபிள்யூ. ஏ, தர்மதாவசாபேசுகையில் 'தென் இலங்கையில் இருந்த இன வெறியர்களுக்கு எதிராக நாம் நடாத்திய போராட்டம் பயன் அளித்து இன்று இனவெறியர்கள் அரசியலில் இருந்து தூக்கி எறியப்பட்டுள்ளனர் இதேபோல வடக்கில் உள்ள இன வெறியர்களை தூக்கிவீசி தமிழ் மக்களும் எம்முடன் சேர்ந்து பிரச்னையை அணுகி தீர்க்கமுன் வரவேண்டும் என்ருர்''

வடபிரதேசக்கம்யூனிஸ்ட் வாலிபர் சம்மேளனச் செயலாளர் திரு. எஸ், விஜயானந்தன் கம்யூனிஸ் வாலிபர்சம்மேளனத் தலைவர் எஸ் எச் இரத்தினவீரா உட்படப்பலர் உரையாற்றினர்,

## 'முஸ்லிம் ம. வித்தியாலய நோக்கமே வீணுகி விடும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

''பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் பெண்களுக்கென ஆரம்பிக்கப்பட்டது இந்தக் கதீஜா மகா வித்தியாலயம். இலங்கையில் முஸ்லிம்கள் வணிகத் துறையில் அதிகம் ஈடுபடுவதால் கல்வியில் நாட்டம் [illegible]

உயர் வகுப்புகளுக்கு மாணவர்கள் சேராவிட்டால் இந்த முஸ்லிம் மகாவித்தியாலயங்களை அமைத்த தன்நோக்கமேவீணுகிவிடும். எனவே கல்வித்திணைக்களம் இந்த வளர்ச்சிக்கு நன்கு உதவவேண்டும் என அதிபர் செல்வி முஹிதீன் தமது வரவேற்புரையில் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். உலக மக்கள் மத்தியிலுள்ள பொதுவான அடிப்படை சக்திகளை ஒன்று திரட்டிச் செயற்படுத்த சக்தியிழந்துபோனுல் வேறு சர்வதேச அரங்கை ஏற்படுத்த வேண்டியேற்படும். கடந்த 25 ஆண்டுகளாக ஐ நா சபையைப் பலப்படுத்த இந்தியா பாடுபட்டுவந்திருக்கிறது கொரியா, காங்கோ போன்ற இடங்களில் சமாதானத்தை ஏற்படுத்த இந்தியா பாடுபட்டு வந்தது. இன சமத்துவம், காலனி ஒழிப்பு ஆகியவற்றை ஏற்படுத்த ஐ நா பாடுபடவேண்டும்

ஐ நா சபையின் இரண்டாவது 10 ஆண்டுத் திட்டத்தைக் குறிப்பிட்டு அவர் பேசுகையில், அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் உலகில் இருந்துவருகின்றன அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார

## பிரி. பொருட்களில் ரஷ்யா மோகம்!

லண்டன், அக். 24

பிரிட்டனில் உற்பத்தி செய்யப்படும் நுட்பமான தொழில்நுட்பசாதனங்களில் ரஷ்யா அக்கறை காட்டிவருகிறது. சமீபத்தில் ரஷ்ய விவசாய அமைச்சரும் கோழிப்பண்ணை அதிகாரிகள் சிலரும் பிரிட்டனுக்கு விஜயம் செய்ததை அடுத்து ரஷ்ய அரசாங்கம் பிரிட்டனிடமிருந்து 10 லட்சம் பவுண்கள் பெறுமதியான அரைக்கும் யந்திரம், 100,000 பவுண்கள் பெறுமதியான கோழிப்பண்ணை சாதனங்கள், 50,000 பவுண்கள் பெறுமதியான பண்ணை விலங்கினங்கள் ஆகியனவற்றை வாங்கியுள்ளது.

பிரிட்டிஷ் விவசாய ஏற்றுமதி கவுன்சிலின் அதிபரான சேர் ரூடி ஸ்டேர்ன்பெக் இத்தகவலை அறிவித்துள்ளார். பிரிட்டிஷ் விவசாய தொழில்நுட்ப சாதனங்களுக்கு உலக சந்தையில் பெரும் வரவேற்பிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க, ரஷ்ய வெளிநாட்டு வர்த்தக அமைச்சு 750,000 பவுண்கள் பெறுமதியான பிரிட்டிஷ் மின்கணித யந்திரங்களுக்கு (கம்யூட்டர்) கோரிக்கைவிடுத்திருக்கிறது. சமீபத்தில் மாஸ்கோவில் கைச்சாத்திடப்பட்ட ஒரு உடன்படிக்கையின்படி பிரிட்டனிலுள்ள சர்வதேச கம்யூட்டர் லிமிட்டட் ஸ்தாபனம் இந்த நுணுக்கமான மின்கணித இயந்திரங்களை சோவியத் யூனியனுக்கு வழங்கும்.

திரு. வி. என். நவரத்தினத் திற்கும் அனுப்பி வைத்திருக்கிருர்.

ரூவரின் பெயர்களைத்தாம் சுட்டிக்காட்டியுள்ளதாகவும் அவர் சொன்ஞர்.

(உடுவில், நிரு )

சபை அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப் படுமென யாழ்ப்பாணம் தேர்தல் அதிகாரி அறிவித்துள்ளார்.

னர். இது பற்றி உரிய அதிகாரிகளுடன் பொதுமக்கள் தொடர்பு கொண்டுள்ளனர்.


# பொஸ்றின்

புகையிலையும் காய்கறியும் பயிரிடும் கமக்காரரே!




இன்று பெறக்கூடிய சக்திமிகு உடன் செயலாற்றும்
இக்கிருமிநாசினி காய்கறி, புகையிலை ஆகியவற்றை
தாக்கும் பீடைகளை ஒழிக்க வல்லது.

**லங்கெம் இலங்கை லிமிட்டெட்**

லிங்கோ கட்டிடம். த. பெ. 919 கொழும்பு.

டெலிபோன்: 28333

இரசாயன சேவைக்கு மறுசொல் லங்கெம.


அதே ஆண்டு லோண்ட்-5, லோண்ட்-6 இரண்டும் சந்திரனை வெற்றிகரமாக வட்டமிட்டன. இப்பொழுது அனுப்பப்பட்டுள்ள கலம் 27-ந் திகதி பூமிக்குத் திரும்பி வருமாம்.

## கதிர்காமத்தில் கந்தஷஷ்டி

கதிர்காமத்தில் புனிதமான மாணிக்ககங்கைக் கரையில் அமைந்துள்ள யோகாசிரமத்தில் இம்மாதம் 31-ந் திகதி 'கந்தஷஷ்டி' விரதம் அனுஷ்டிக்கப்படும். யோகாசனம், பூசை, பிரார்த்தனை, ஜெபம், தியானம், சத்சங்கம், உபந்நியாசம், நடை தியானம், கர்மயோகம் முதலியன நடைபெறுமென்று ஸ்ரீஜோதி சுவாமி அறிவிக்கிருர்.

## நெடுந்தீவு படகு சேவை குறைப்பு

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவு குறிகாட்டுவானுக்கு இடையே நடைபெறும் பிரயாண சேவை மூன்று தடவைகளில்இருந்து இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது. இச்சேவையில் ஈடுபடும் படகுகள் பழுதடைந்திருப்பதே இதற்குக் காரணமாம். அடிக்கடி இச்சேவை ஸ்தம்பிப்பதால் தபால் சேவையிலும் சீர்கேடு ஏற்படுவதாகவுப் பிரயாணிகள் பெரிதும் அவதியுறுவதாகவும் இப்பகுதி எம். பி. யிடம் முறையிடப்பட்டுள்ளது

நெடுந்தீவு கொந்தளிக்கும் கடலை சமாளிக்கக் கூடிய தனியார் பிரயாண மோட்டார் படகுகள் இங்கு இல்லாததால் பிரயாணிகள் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கும் இக்கட்டான நிலை உருவாகிவருகிறது.

களுக்கென ஆரம்பிக்கப்பட்டது இந்தக் கதீஜா மகா வித்தியாலயம். இலங்கையில் முஸ்லிம்கள் வணிகத் துறையில் அதிகம் ஈடுபடுவதால் கல்வியில் நாட்டம் குறைந்தவர்களாய் இருந்தனர். ஆனுல் ஆறுமுகநாவலர் அநகாரிக தர்மபாலா போன்று தேசிய வீரர் வரிசையில் முன்னணியிலுள்ள சித்திலெப்பை ஒரு புதிய ஒளியை முஸ்லிம் சமுதாயத்தில் தோற்றுவித்தார். அதன் பின்னர் முஸ்லிம்களின் கல்வி நிலை உயரத் தொடங்கியது. அதன் தொடர் வளர்ச்சி தான் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பெண்களுக்கான இந்தக் கதீஜா மகாவித்தியாலயம் தோன்றத் தோற்றுவாயாக அமைந்தது முஸ்லிம் சமுதாயத்தின் ஜீவநாடியாக அமைந்துள்ள இந்தக் கல்விக்கூடம் அரசின் நேசக்கரங்களையும் எதிர்பார்க்கிறது.''

இவ்வாறு யாழ்ப்பாணம் கதீஜா வித்தியாலயத்திற்கு கல்வி உதவி அமைச்சர் திரு. பி. வை. துடாவை நேற்று விஜயம் செய்த போது கல்லூரி அதிபர் செல்வி லை. முஹிதீன் உதவி அமைச்சரை வரவேற்றுப் பேசுகையில் கூறினுர்.

பயிற்றப்பட்ட கணித ஆசிரியையும், ஒரு பெண் மௌலவி ஆசிரியையும் இக்கல்லூரிக்கு அவசியமென்றும், டெலிபோன் மற்றும் கல்லூரிக் கட்டிடம் காணித் தேவைகள் பற்றியும் கல்லூரி அதிபர் உதவி அமைச்சரிடம் சுட்டிக் காட்டினுர்.

''கனிஷ்ட வித்தியாலயங்களில் கல்வி கற்கும் முஸ்லிம் பிள்ளைகளை முஸ்லிமல்லாத மகாவித்தியாலயங்களில் சேர்க்க இனிமேல் இடமளிப்பது நமது வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

தன்நோக்கமேவீணுகிவிடும். எனவே கல்வித்திணைக்களம் இந்த வளர்ச்சிக்கு நன்கு உதவவேண்டும் என அதிபர் செல்வி முஹிதீன் தமது வரவேற்புரையில் தெரிவித்தார்.

## நினைவு விழா

மாவிட்டபுரம், சனி

கட்டுவன், மயிலிட்டி தெற்கு வறுத்தலைவிளான் முற்போக்கு வாலிப முன்னணியினரால் அமரர் க. பொன்னம்பலத்தின் 5-வது ஆண்டு நினைவு விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவுக்கு திரு. ஜே. எஸ். டி. அரியரத்தினம் தலைமை வகித்தார்

மயிலிட்டி தெற்கு ஞானோதயாவித்தியாசாலையில்நடைபெற்ற இக்கூட்டத்தில் பண்டிதர் வ. முத்துக்குமாரு, சி. நாகலிங்கம், பொ. பாலநாதன், க நாகலிங்கம் உட்பட பலர் உரையாற்றினர்,

வேலி அடைப்போமா என்பது பற்றிய கவியரங்கும், காவியம்கண்ட கயமைகள் என்பதுபற்றிய கருத்தரங்கும் கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் இடம் பெற்றன.


கைத்தறி
நெசவாளர்களுககு
**ஓர் அறிவித்தல்**

உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்,

**S. R. S.**
**ஜவுளி மாளிகை**

எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296



மகத்தான தீபாவளி
**மலிவு விற்பனை !!**

சிறுமிகளின் கவுண்கள் ம. வி. 5-50 க்கு மேல்
சிறுவர்களின் சூட்டுகள் ம. வி. 5-5 ) க்கு மேல்
றெடிமேட் பிளவுசுகள் ம. வி. 5-5) க்கு மேல்

**டயரும்ஸ்**

54, 60, மெயின்வீதி யாழ்ப்பாணம்.
(தொலை பேசி: 316)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

சத்தியமும், அகிம்சையும் ஒருசிலர் மட்டும் கடைப்பிடிப்பதற்காக ஏற்பட்டதன்று அதேபோல் சுயகட்டுப்பாடும் ஒருசிலருக்காக ஏற்பட்டதன்று. இம் மூன்றும் மனித குலம் முழுவதும் கடைப்பிடிப்பதற்கானவையே. — மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 8-ந் திகதி (25-10-70)


## வரவு—செலவுத் திட்டம்

அடுத்த நிதிவருடத்தில் அரசாங்கத்தின் வரவு செலவுகளில் 168 கோடி ரூபாய் துண்டு விழுகிறது. துண்டுவிழும் இத் தொகையைச் சரிக்கட்ட அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறதென்பதை நிதிஅமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இன்று அறிவிக்கவிருக்கிறார்.

இதுதான் கூட்டணிஅரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம். நிதிஅமைச்சர் சமர்ப்பித்துள்ள மதிப்பீடுகளின்படி 1970—71-ம் ஆண்டில் சுமார் 420 கோடி ரூபாய் செலவேற்படவிருக்கிறது. இது 1969-70-ம் வருடத்திய திருத்தியமைக்கப்பட்ட செலவுத் தொகையிலும் பார்க்க 29 கோடி ரூபாய் அதிகமானதாகும். என்றாலும் கூட்டணி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளில் ஒரு சிலவற்றையாவது நிறைவேற்றுவதற்கு இத் தொகை போதுமாவென்பதே சந்தேகம்.

கூட்டணியினர் அளித்த வாக்குறுதியின்படி இரண்டு கொத்து அரிசி இப்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலதிகமாகக் கொடுக்கப்பட்டுவரும் ஒரு கொத்து அரிசிக்கு பணம் கொடுத்துத்தான் மக்கள் வாங்கினாலும் உலகச் சந்தையில் அதிக விலைக்கு அரிசியை வாங்கிக் குறைந்த விலைக்கே மக்களுக்குக் கொடுக்க வேண்டியிருப்பதால் இதில் ஏற்படும் நஷ்டத்தை அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. சீனியைக் குறைந்தவிலையில் வாங்கி கூடுதல் விற்பனை செய்வதால் கிடைக்கும் இலாபம்கூட இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய போதுமானதல்ல,

அரிசிப் பிரச்னை தவிர வீடமைப்பு இலங்கை இந்திய ஒப்பந்த அமுல், கைத்தொழில்விருத்தி மற்றும் சோஷலிஸ அமைப்பை உருவாக்குவதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு இப்போதுள்ள நிலையில் அரசாங்கத்துக்கு அதிகப் பணம் தேவைப்படும் என்பதில் சந்தேகமில்லை.

வடக்கில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இராமநாதன் பல்கலைக் கழகத்துக்கு பழையபடி அடையாள மான்யம்தான். காங்கேசன்துறை துறைமுகத்தைப் பற்றி எதுவும் காணவில்லை,

இன்று நிதிஅமைச்சர் நிகழ்த்தவிருக்கும் வரவு—செலவுத்திட்ட உரையில் இவைபற்றிக் குறிப்பிடுவாராவென்பதைப் பார்க்கலாம்

விலைவாசி உயர்வு வேலையில்லாத் திண்டாட்டம் வீட்டுப் பிரச்னை இவைகளைத் தீர்க்க என்ன வழியென்பதை நிதிஅமைச்சரிடம் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

## தமிழ்ப் பாதுகாப்பு

தமிழைப் பாதுகாக்க வேண்டுமென்ற கவலையும் உணர்ச்சியும் ஈழம் வாழ் தமிழரிடையே அதிகரித்திருக்கும் இச்சமயத்தில், இந்நோக்கத்தை நிறைவேற்றி வைப்பது பற்றி ஆலோசிப்பது அவசியமாகும். தமிழ்ப் பாதுகாப்பு என்பது தமிழ் மொழியைப் பாதுகாப்பது மட்டுமன்றி தமிழ்கை நட்டமாகிறதென்று அஞ்சப்படுகின்றது. அதனால் தமிழ் அறிஞர்கள் நல்ல நூல்களை எழுதி வைத்தும் அவற்றை வெளியிட முடியாமல் சங்கடப்படுகின்றனர். கூடுமானவரை நடுத்தர தமிழ்க் குடும்பத்தாரும் இங்கு வெளியாகும் தமிழ் நூல்களை வாங்குவது என்று வழக்கப்படுத்திக்

# யாழ்ப்பாணப் பொதுச் சந்தை பற்றி மாநகரசபையில் நடந்த சர்ச்சை

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் வேலைகள் இன்னும் 2 வருடம் சென்றாலும் முடியாது என நான் உறுதியாக கூறுகிறேன். சபையின் பொறியியலாளர் கூட இதனையே கூறியிருக்கின்றார். வேலை மிக மெதுவாகவே நடைபெறுகிறது. தீபாவளிக்கு வேலை முடியும். தை மாதம் முடியும்என மைற் ஸ்தாபனத்தார். பத்திரிகையில் அறிக்கை விட்டனர். வேலை தாமதத்திற்கு பணக் கஷ்டம்தான் காரணமென ஈழநாடு பத்திரிகையில் இந்தச் சபையையும் நிர்வாகத்தையும் தாக்கி அறிக்கை விட்டது கேவலமான செயல், இதனை நாம் பலமாகக் கண்டிக்கிறோம்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக் கூட்டத்தில் மேயர் திரு ரி. எஸ். துரைராசா மேற்கண்டவாறு கூறினார். இக்கூட்டத்தில்ஒருசிலரைத் தவிர மற்றும் உறுப்பினர்கள் எல்லாரும் மைற் ஸ்தாபனத்தை கண்டித்தனர்.

மைற் ஸ்தாபனத்தினர் மாநகரசபையுடன் செய்து கொண்ட ஒப்பந்தப்படி 12-11-70ல் நவீன மார்க்கட் வேலைகள் முடிவடைய வேண்டும் வேலைமுடிவடையாததால் மைற் ஸ்தாபனத்தினர் 31-11-71 வரை கால எல்லையை நீடிக்கும்படி அவகாசம் கேட்டிருந்தனர். இவ் விஷயம் 18-10-70-ல் நடந்த நிதிக்குழுக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு 31-3-71 வரை கால எல்லையை நீடித்துக்கொடுப்பதென சிபார்சு செய்யப்பட்டது.

மீண்டும் சபையில் இவ் விஷயம் நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

மேயர் துரைராசா மேலும் கூறியதாவது:

நவீன மார்க்கட் வேலைகள் முடிவடையாததால் நவீன மார்க்கட் மூலம் 1971-ம் ஆண்டு கிடைக்குமென எதிர்பார்த்த உத்தேச வருமானத்தை சபை இழக்கிறது. இதனை மெம்பர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மைற் ஸ்தாபனத்தினர்

அந்தோனிப்பிள்ளை: 31-3-70 வரை தவணை கொடுப்போம். கூடக் கொடுக்கக்கூடாது.

மேயர்: வரியிறுப்பாளர்கள் இதனை அறியவேண்டும்

சிவசுப்பிரமணியம்: மைற் ஸ்தாபன அதிபர் பத்திரிகையில் மிகவும் கேவலமாக சபையையும் நிர்வாகத்தையும் கூறியிருக்கிறார்: இதையிட்டு நான் 3 கேள்விகள் கேட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஏதோ தர்மத்திற்கு செய்வதுபோல் பாசாங்குசெய்து, பத்திரிகையில் நடிக்கிறார்.

நவீன மார்க்கெட் எப்படி முடியுமென மக்கள் ஆசையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் வரியிறுப்பாளர்களை ஏமாற்றுவதற்கு விடக்கூடாது

மேயர்: சிமெந்துக் கார்ப்பரேஷனுக்கு 20,000 சீமெந்துப் பைக் கெட்டுகளுக்குச் சிபார்சு செய்தோம் 16000 பைக்கெட்டுக்கள் கிடைத்தன ஒருபைக்கெட்டின் விலை பத்துரைரூபா வெளிக்கடையில் ஒருபைக்கெட் 14 ரூபா விற்கிறது. மிகுதி 8000 பைக்கெட்டுகளையும் மைற் ஸ்தாபனத்தினர் கடையில் 14 ரூபாய்ப்படியே இனிமேல் வாங்கப்போகிறார்களா?

தெய்வேந்திரன்: மேயருக்கு நல்ல அனுபவம் இருப்பதால் ஒன்றரை வருடம் சென்றாலும் முடியாது என்கிறார் அவர்கள் ஒருவருட அவகாசம்தானே கேட்கிறார்கள். கொடுத்தால் என்ன? கட்டி முடிக்காவிட்டால் ஒரு லட்சம் ரூபா நஷ்டம் தரட்டும்.

என். ரி. செல்லத்துரை: 6 மாதத் தவணையாவது கொடுக்கவேண்டும்.

ஏ. துரைராஜசிங்கம்: 9 மாதத் தவணை கொடுக்க வேண்டும்

ரி. கே. ராஜரத்தினம்: 9 மாதம் கொடுங்கள்

மேயர்: 3 மாதம் தவணை கொடுக்க நியாயமிருக்கிறது அதற்கு மேல் கொடுக்க நியாயமில்லை

[illegible]சுப்பிரமணியம்: முன்பு மண் பிரச்னை இருந்தது. பின் சிமெந்து மோசடி நடந்திருக்கிறது. இவற்றை எல்லாம் மறந்துவிட்டு நிதிக் குழு முடிவை ஏற்றுக் கொள்வோம். நிதி நிலை

ப்பது தீர்க்கமான முடிவாக இருக்க வேண்டும். 6 மாதத்திற்கு பின் மீண்டும் தவணை கொடுக்க கூடாது.

மேயர்: இது கடைசி முடிவாக இருக்க வேண்டுமாம் கடந்த 5 மாதம் எத்தனை தொழிலாளர் வேலை செய்திருக்கின்றனர். 1 நாளைக்கு 6 ஆளுக்கு மேல் இருக்கவில்லை. 3 ஆசாரிக்கு கூட இருக்கவில்லை, கூலியாட்கள் 25 பேருக்கு கூட இருக்கவில்லை. சில நாட்களில் 15 கூலியாட்கள் தான் வேலை செய்துள்ளனர். இந்த நிலையில் இப் பெரிய வேலையை 2 வருடத்தில் முடிப்பாரோ என்பதும் சந்தேகமானது. 2 வருடம் சென்றாலும் இவர் வேலையை முடிக்கமாட்டார் என பொறியியலாளர் கூறியிருக்கிறார். நிதிக்குழு சிபார்சுபடி 5 மாதம் கொடுப்போம், அதற்குமேல் கொடுப்பது சரியல்ல.

அந்தோனிப்பிள்ளை: வேலை முடியும்வரை செலவில் அரைவாசியைத் தான் கொடுக்கவேண்டும் என்று தான் கூறுகிறேன். மிகுதியை கடைசியில் கொடுக்கலாம்.

மேயர்: இதுவரை 13 லட்சத்தில், 5 லட்சம் ரூபா வேலைதான் நடந்திருக்கிறது

செல்லத்துரை: யாழ்ப்பாணம் ஒரு தலைநகரம். அங்கு நவீன மார்க்கட் எப்போ வரும் வருமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். 58-ம் ஆண்டுமுதல் சந்தையை மாற்றி மாற்றி இன்றுதான் இந்த நிலைக்கு வந்திருக்கிறது. இதனால் எவ்வளவோ பணம்நஷ்டம்.

துரையப்பா: குத்துவிளக்கில்தான் கணக்கு பார்க்க வேண்டும்.

செல்லத்துரை: மைற் அதிபர் ஒரு இன்ஜினியர். அதுவும் தமிழர்.

துரையப்பா: டாக்டரும் கூட.

செல்லத்துரை: அவரும் மனம் வைத்து தமிழ்பேசும் மக்களுக்கு கூடிய சீக்கிரம் இதை கட்டி முடிக்கவேண்டும்.

துரையப்பா: தவணை கொடுப்பது புதிய விஷயமல்ல நரிக்குண்டு வீடமைப்பு திட்டத்திற்கு எத்தனை முறை தவணை கொடுத்திருக்கிறோம். நமக்கு மார்க்கட் வேண்டும். கள்ள மார்க்கட்டல்ல,

சபையில் பலர்: 6 மாதம் கொடுப்போம்.

முடிவில் 12-11-70 முதல் மேலும் 6 மாதம் தவணை கொடுக்கப்படுமென மேயர் அறிவித்தார்.

— சபை நிருபர் 'யோகி'

## தனிச் சமூகப் பிரகடனம் மூலமே உரிமைபெறலாமாம்

மாவிட்டபுரம், சனி

'நமது இனம் முன்னேற்றம் பெற்று சபீட்சமான வாழ்வை அமைக்கும் நோக்குடன்தான் நாம் தனிச் சமூக கோரிக்கையை விடுத்தோமே தவிர தமிழ் இனத்தைப் பிரிக்கவோ அல்லது எம்மைத் தனியினமாக்கவோ நாம் இக்கோரிக்கையை விடவில்லை' இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவரும் நியமன எம். பி. யுமான திரு. எம். சி சுப்பிரமணியம் மல்லாகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

திரு. சுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- 'நமதுமகாசபை எமது சமூகத்தை முன்னேற்றவேண்டும் என்றஒரே ஒரு நோக்கத்துடன்தான் புதிய நிர்ணய அரசியல்சபைக்கு தனிச்சமூகக் கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளது' இதன்மூலமே எமது இனத்தின் ஒதுக்கப்பட்ட நிலை நீங்கி, மற்றவர்களுடன் சம உரிமை பெற வழி ஏற்படுத்த முடியும். இப்போது எமது கோரிக்கையை புதிய அரசியல் அமைப்பில் சேர்த்துக்கொள்ளாவிட்டால் இது ஒருபோதும் சட்டத்தில் இடம் பெறமாட்டாது, நாம் நிரந்தரமான தீர்வையும் காணமுடியாது' இதனால் நாம் தொடர்ந்து உரிமைகள் மறுக்கப்பட்ட இனமாகவே வாழவேண்டி இருக்கும்.

சோஷலிச நாடுகளில் இப்படியான பின்தங்கிய இனங்களின் சுபீட்சம் கருதி தனி இனமாக உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது; இதனால் அங்கு அரசியலுக்கும் எந்த ஓர் இனத்துக்கும் தீமை ஏற்படவில்லை. ஆதலால்சோஷலிச நாடான இலங்கையிலும் அரசியல் மூலம் உரிமை வழங்கப் பட்டால் தமிழ் இனத்தை அது பாதிக்கச் செய்யாது.

எமது இனத்தின் நன்மை கருதி நாம் இக் கோரிக்கையை விடுத்ததற்காக தமிழினத்தைக் கூறு போட்டுப் பிரிக்க முயற்சி செய்கிறோம் என்று எம்மீது சிலர் குற்றம் சுமத்துகிறார்கள் நாம் இவற்றுக்குப் பணியாமல் எமது கோரிக்கை புதிய அரசியலமைப்பில் இடம்பெறச் செய்ய வேண்டும்.

......

## வயோதிபர் தற்கொலை

மாவிட்டபுரம், சனி

நோயைத் தாங்க முடியாத 70 வயது வயோதிபர் ஒருவர் நஞ்சருந்தி உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று மயிலிட்டி வடக்கில் நேற்று நடைபெற்றது.

மயிலிட்டி வடக்கை சேர்ந்த இராசசிங்கர் வேலுப்பிள்ளை என்பவரே இவ் விதம் மரணமானவர். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'மஜித் மௌலவி சில வேளைகளில் என் வீட்டில் சாப்பிடுவதுண்டு'

## ஆதம் லெப்பை சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு நேற்று எட்டாவது தினமாக விசாரிக்கப் பெற்றது. யாழ் தேர்தல் நீதி மன்றத்தில் நீதியரசர் [illegible]வின்

நீதி: அழகக்கோனைப் பொறுத்த வரை எத்தனை நோட்டீஸ்பார்த்தீர்?- இரண்டுமூன்று.

வழ: முன்னாள் பட்டின சபைத் தலைவரை நீர் அடித்தீர்? என்னைதள்ளிவிழுத்தியதால் அடித்தேன்.

சொல்லிக் கொடுப்பேன். என் மனைவிக்கு57 வயதுஎனக்கு 3 பிள்ளைகள் உண்டு. எனக்கு 14 பேரப்பிள்ளைகள் உண்டு.

கடந்த தேர்தலின் போது எனக்கு வாக்குரிமை இருந்தது.

அட்வகேட் எச். டி. தம்பையா குறுக்குவிசாரணை செய்தபோது ஆதம்லெப்பை கூறியதாவது: 64-ம் ஆண்டு நான் பாடசாலையில் படிப்பித்தேன் அந்த பாடசாலை சாகுல் ஹமிட்டினுடையது. நான் 62-ம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தில், இந்நோக்கத்தை நிறைவேற்றி வைப்பது பற்றி ஆலோசிப்பது அவசியமாகும். தமிழ்ப் பாதுகாப்பு என்பது தமிழ் மொழியைப் பாதுகாப்பது மட்டுமன்றி தமிழ் கலாச்சாரம், பண்பாடு முதலியவற்றைப் பாதுகாக்கவேண்டியதும் உள்ளடங்கும். இவற்றின் பாதுகாப்புக்காக அரசாங்கத்தையும் அரசியல் சட்டத்தையும் மட்டும் எதிர்பார்ப்பது போதாது. சிறப்பாக இந்தப் பாதுகாப்பு இந்நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் வசிக்கும் ஒவ்வொரு தமிழரின் கையில் தான் உள்ளது. அண்டையிலுள்ள ஒரு நாடு தமிழையும், தமிழ் கலாச்சாரத்தையும் பாதுகாக்கும் என்று நம்பி, இங்குள்ள தமிழர் சும்மா இருப்பதும் புத்தியாகாது. இங்குள்ள எல்லாத் தமிழரும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, மாத்தளை, புத்தளம், சிலாபம், கொழும்பு முதலிய பல பல பகுதிகளிலுமுள்ள ஏழை, பணக்காரர் முதலிய எல்லாத் தமிழரும் இம்முயற்சியில் ஈடுபடுவது அவசியம்.

தமிழ் மக்கள் வீடுகளிலே தமிழிலேயே பேசவேண்டும். கடிதம், முகவரி எல்லாம் கூடிய மட்டில் தமிழிலேயே எழுதவேண்டும். தமிழரே தமிழில் பேசாமலும் எழுதாமலும் இருந்தால் தமிழை வேறு யார் எப்படி பாதுகாக்க முடியும்? தினசரி வாழ்க்கையில் தமிழை அதிகமாகப் பயன்படுத்துவதில் தான் தமிழ் வாழ முடியும்.

ஒவ்வொரு கிராமத்திலும் குறைந்தது ஒரு படிப்பகமும் ஒரு நூலகமும் இருப்பதுடன் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும், ஒவ்வொரு கோவில், கிறிஸ்தவாலயம், பள்ளிவாசல் இவற்றிலும் நூலகமும், படிப்பகமும் இருத்தல் வேண்டும். நல்ல தமிழ் நூல்களை அவற்றில் வாங்கி வைத்து யாரும் இலவசமாக வந்து படிக்க வாய்ப்பளித்தல தமிழுக்குச் செய்யும் நல்லதோர் பணியாகும். செல்வந்தர் வீடுகளிலும் இவ்வித நூலகம் இருப்பின் சமூகத்தின் அபிமானத்தை அவர்கள் பெறுவதுடன், தமிழ் எழுத்தாளனையும் அது ஆதரிப்பதாக இருக்கும். தமிழில் நூல்கள் வெளியிட்டால் அவை பெரும்பாலும் விலை போகாமல் வெளியிட முடியாமல் சங்கடப்படுகின்றனர். கூடுமானவரை நடுத்தர தமிழ்க் குடும்பத்தாரும் இங்கு வெளியாகும் தமிழ் நூல்களை வாங்குவது என்று வழக்கப்படுத்திக் கொண்டால் அதனால் தமிழும் தமிழ் அறிஞர்களும் வாழவும் வளரவும் முடிவதாக இருக்கும். 21 வயது வந்தோருக்கும் தமிழ் வகுப்புகளை நடத்தலாம். ஒவ்வொரு தமிழ் வீட்டிலும் ஒரு தமிழ் அகராதி, ஒரு தமிழ் பத்திரிகை, ஒரு தமிழ் சஞ்சிகை இவற்றை கூடிய மட்டில் வாங்கலாம்.

இதுதவிர தமிழில் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி இவற்றை நடத்தி பரிசுகள் அளித்து உற்சாகமூட்டுவதுடன், தமிழுக்கு தமிழர் முதலிடம் அளிக்கவேண்டும். தமிழர் தான் தமிழை, தமிழ்ப் பண்பை வளர்க்க முடியும். அரசாங்கத்தையோ பிறரையோ எதிர்பார்த்துக்கொண்டும் குறை கூறிக்கொண்டும் காலம் கழிப்பதால் தமிழ் பாதுகாக்கப்பட முடியாது. நாடகம், நடனம், சித்திரம், சிற்பம், விளையாட்டுகள், யோகாசனம், விவசாயம், நந்தவனம் அமைத்தல் முதியோர்களைப் பேணுதல், பசு பாதுகாப்பு, மதுவிலக்கு, கிராமக் கைத்தொழில்கள், உயர்ந்த தமிழ் நூல்களை தினசரி அரைமணி நேரமவது படித்தல், தமிழ் இசை பயிலுதல், தமிழ் இசைக் கருவிகளில் பயிற்சி பெறுதல், தமிழ் உணவு வகைகளைத் தயாரித்துப் பயன்படுத்துதல், ஆடைகளை நெசவு செய்தல் முதலியவைகளில் தமிழர் ஊக்கம் காட்டி அதில் ஈடுபடுவதாயின் தமிழ்ப் பண்புகள் அழியாமல் தமிழ் வாழ்க்கை முறை பாதுகாக்கப்படும். இதே சமயம் அடிக்கடி கருத்தரங்குகள் நடாத்தி, தமிழ்த் தலைவர்கள் மற்றவர்களுக்கும் வழி காட்டுவதும் அவசியமாகும்.

## தவறிவிட்டது

செயினுடன் கூடிய ரூலேக்ஸ் (Rolex) கைக்கடிகாரம் 22-10-70-ந் திகதி நல்லூர் ராஜவீதிக்கும் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் ரூபா 100/- தரப்படும். விளம்பர இல: 2355, C/o 'ஈழநாடு' லிமிட்டெட்' யாழ்ப்பாணம். 2355

1971-ம் ஆண்டு கிடைக்குமென எதிர்பார்த்த உத்தேச வருமானத்தை சபை இழக்கிறது. இதனை மம்பர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மைமற் ஸ்தாபனத்தினர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திடமிருந்து 16000 சீமெந்து பக்கெட்டுகள் வாங்கியிருக்கிறார்கள். மராமத்து இன்ஜினியரின் குறிப்பின் பிரகாரம் நவீனசந்தை வேலைகளுக்கு இன்றுவரை 80000 பக்கட்டுகளே பாவிக்கப்பட்டிருக்கிறது. மிகுதி 80000 பக்கெட்டுகள் மாயமாக மறைந்தது எப்படி? சிமெந்து கார்ப்பரேசனுக்கு இனிமேல் சீமெந்து பக்கெட் வழங்கும்படி சபை சிபார்சு செய்யாது. நவீன சந்தை வேலைகள் தாமதமாக நடக்கிறது. இந்த நிலையில் ஒன்றரை வருடமானாலும் முடியாது.

தெய்வேந்திரன்: ஒன்றரை வருடம் சென்றும் முடியாவிட்டால் மேயர் அதைப் பற்றிக் கேட்க வேண்டும். எங்களுக்கு மார்க்கட்தான் வேண்டும். வேலைகள் நடைபெறவேண்டும். அவகாசம் கொடுப்பது நல்லது, கட்டாவிட்டால் அபராதம் விதிக்க வேண்டும். அவகாசம் கொடுத்தால் இரவுபகலாக வேலையைச் செய்வார்கள். அடுத்த நவம்பர்வரை அவகாசம் கொடுப்போம், அவதிப் படுத்தினால் கட்டடம் நல்லாக அமையாது. கட்டடம் நல்லாய்வர அவர்களுடன் ஒத்துழைப்போம்,

கே எஸ், நடராசா. நாங்கள் கூடுதலாக காசைக் கொடுத்துவிட்டோம், அப்படியிருந்தும் வேலைகள் முடியவில்லை,

துரைராசசிங்கம்: கடைசித் தவணை ஒன்றைக் கொடுப்போம்.

கே. எஸ், நடராசா: தவணைகொடுக்க நான் சம்மதமில்லை,

அந்தோனிப்பிள்ளை: பொறியியலாளரே ஒன்றரை வருடம் செல்லும் எனக் கூறியிருக்கிறார், நல்ல முறையில் அமையவேண்டுமானால் தவணைகொடுப்பது நல்லது

மேயர்: மார்க்கட் வேலையில் ஒரு நாளைக்கு 5 மேசன்மார் கூட வேலை செய்யவில்லை. இந்நிலையில் எப்படி வேலை முடியும் பெரிய கட்டடத்தில் 50 மேசன்களும் 200 கூலியாட்களும் வேலை செய்தால்தான் குறித்த தவணையில் வேலை முடியும். நாலு ஐந்து ஆட்களுடன் வேலையை முடிக்க முடியுமா?

சுப்பிரமணியம்: முன்பு மண் பிரச்சினை இருந்தது. பின் சிமெந்து மோசடி நடந்திருக்கிறது. இவற்றை எல்லாம் மறந்துவிட்டு நிதிக் குழு முடிவை ஏற்றுக் கொள்வோம். நிதி நிலை காட்டப்படவேண்டும்

கே எஸ் நடராசா: வேலைகளைத் துரிதப்படுத்தவேண்டும் அது மேற்பார்வையாளரின் பொறுப்பு மக்கள் கண்ணில் மண்ணைப் போடவிடக்கூடாது

காதர்: தவணை கடந்தால் நாளொன்றுக்கு 150 ரூபா தரவேண்டுமென ஒப்பந்தத்திலிருப்பதாக அறிகிறேன். 3 மாதத் தவணை கொடுப்போம், அதன்பின் வேலை முடியாவிடில் நாளொன்றுக்கு 150 ரூபா தரட்டும்

மார்க்கண்டு: லொறி ஒன்று சிமெந்து ஏற்றிச் சுழன்று சுழன்று திரிந்ததை நான் கண்டேன், 800 பைக்கெட்டுக்கள் எப்படி மறைந்தன?

தெய்வேந்திரன்: 6 மாதமாவது தவணை கொடுப்போம்

மேயர்: 5 மாதம் கொடுப்போம். பின் முன்னேற்றத்தைப் பார்த்துச் செய்வோம்

தெய்வேந்திரன்: மழை காலம்; சட்டடவேலைகள் செய்யமுடியாது, அப்படியானால் ஒப்பந்தகாரருக்கு பெப்ரவரிவரை லீவு கொடுப்போம், அதன்பின் வேலையைத் தொடங்கட்டும்

ஏ. ரி. துரையப்பா: ஒப்பந்தம் செய்யப்பட்டபோதே இவர் கொந்தராத்துக்காரர் இல்லையென பலமுறை சொன்னேன் மந்திரிக்கு அறிவித்தேன் அன்று என்னைப்பார்த்து சிரித்தீர்கள். இன்று எனக்குச் சிரிப்பாயிருக்கிறது திறமைசாலி என்றவர்கள் திட்டுகிறார்கள். கட்டட வேலைகள் தொடங்கிவிட்டது. அவா இடையில் விட்டால் என்ன செய்வீர்கள், புதிதாக ஒருவரும் கட்ட வரமாட்டார்கள். பொது நூல் நிலையத்திற்கும் இந்த நிலை ஏற்பட்டு, நான் மேயராக இருந்தபோது ஊக்கப்படுத்தியதால் லை போட்டு கட்டி முடித்தார்கள். 1 வருடம் கேட்டிருக்கிறார், 6 மாதம் கொடுப்போம், 2 மாதம் மழை வந்துவிடும், கட்டம் தான் நமக்கு தேவை.

ஏபிரகாம்: இவர் 10 லட்சம் ரூபா குறைவாக கேட்டதால் தான் இவருக்கு கொடுக்கப்பட்டது. 8000 பக்கட்டுகளில் மிகுதி வேலைகள் முடிய வேண்டும்.

பஸீர்: இப்பொழுது எடு

யாழ்ப்பாணம், ... மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு நேற்று எட்டாவது தினமாக விசாரிக்கப் பெற்றது. யாழ் தேர்தல் நீதி மன்றத்தில் நீதியரசர் ...சின் சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது. சதக்கத்துல்லா, ஆதம் லெப்பை, சலீம் ஆகியோர் நேற்று சாட்சியமளித்தனர்.

சதக்கத்துல்லா நேற்று சாட்சியமளித்தபோது தனக்கு சொந்தவீடு இருப்பதாக கூறினார்.

வழ: மன்னாரில் உமக்கு ஒரு துண்டு நிலமும் இல்லை என்கிறேன்? இருப்பதற்கு அத்தாட்சி உண்டு.

வழ: மதுபானம் அருந்துகிறனீரா?-இல்லை.

வழ: கண்கள் ஏன் சிவந்திருக்கிறது? பஸ்ஸில் வந்தபோது வண்டு அடித்துவிட்டது.

வழ: 1968ல் மன்னார் பட்டன சபை தேர்தல் நடந்தது? ஆம்

வழ: மனுதாருடன் அசிஸ் போட்டியிட்டார்? ஆம்.

வழ: கடந்த தேர்தலில் மனுதாரரை ஆதரித்தீரா? வாக்களித்தேன் வேலை செய்யவில்லை.

வழ: அசிஸ் மரைக்கார் மே மாதம் 22ம் தேதி வீட்டிற்கு வந்தார்? பல தடவை வந்தார்.

வழ: எதற்காக வந்தார்? குடுப்பசிநேகிதம்.

வழ: அவருடன் கதைப்பதில்லை? சாதாரணமாக காணும்போது கதைப்போம்.

வழ: மே 22ம் தேதி ஒரு வெள்ளிக்கிழமை? ஆம்.

வழ: பள்ளிவாசலுக்கு போனீரா? இல்லை

வழ: ஒரு தடவையும் போகவில்லை? பெருநாளுக்கு போவேன்.

வழ: அசிசை நன்றாக தெரியும்? ஆம்

வழ: அசிஸ் கிரமமாக ஜும்மா பள்ளிக்கு போவது தெரியுமா? ஆம்

வழ: எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார்? 10மணிக்கு.

வழ: உமது ஆதரவு தேடினார்? நோட்டீசை தந்து அழகக்கோனை ஆதரிக்கும்படி கூறினார்

வழ: எப்போது படித்தீர்? 12,30 மணிக்கு

வழ: தேர்தல் முடித்து 10 நாட்களுக்கு பின் மனுதார் சந்தித்தார்? ஆம்

வழ: நோட்டீசைப்பற்றி கேட்டார்? ஆம்

வழ: உங்களுக்கு நோட்டீஸ் கிடைத்ததா என்று கேட்டார்? ஆம்.

நீதி: தேர்தல் காலத்தில் எத்தனை நோட்டீஸ் கிடைத்தது?- 3 அபேட்சகர்களின் நோட்டீசும் கிடைத்தது.

பொறுத்த வரை எத்தனை நோட்டீஸ்பார்த்தீர்?- இரண்டுமூன்று.

வழ: முன்னாள் பட்டின சபைத் தலைவரை நீர் அடித்தீர்? என்னை தள்ளிவிழுத்தியதால் அடித்தேன்.

வழ: மன்னார் பொலிஸ் கோர்ட்டில் அடித்தவழக்கில் எதிரியாக குற்றம் சாட்டப்பட்டீர்?- ஆம்

வழ: குற்றவாளியாக காணப்பட்டீரா?- 100ரூபா அரசாங்க செலவாகக்கொடுக்கும்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதி: குற்றவாளியாக காணப்பட்டீரா?. எனக்கு தெரியாது செலவுதான் கட்டச் சொன்னார்கள்

வழ: அந்தவழக்கை எதிர்த்துவாதாடினீரா?- ஆம்.

வழ: சாட்சிக்கூட்டில் ஏறி சாட்சியமளித்தீர்?-ஆம்

வழ: அதில் 3 வருடத்திற்கு நன்னடத்தை பிணையில் விடப்பட்டீர்?- தெரியாது.

நீதி: எதற்காக நன்னடத்தை பிணையில் விடப்பட்டீர்? -தெரியாது.

நீதி: யாரும் பிணைநின்றார்களா?- ஆம்

நீதி: யார்? மச்சான் ஹாஜா முகதீன்.

மனுதாரின் வழக்கறிஞர் குரசொட் தம்பையா மறுவிசாரணை செய்தார்.

வழ: உமது கண்ணில் நேற்று பன்டேஜ் கட்டியிருந்தீரா?- இன்றும் கட்டியிருந்தேன். கோட்டிற்கு வரும்போது கழட்டினேன்.

வழ: அசிஸ் மரக்கார் 5 வேளை தொழுவதாக சொன்னீர்?-ஆம்.

வழ: தொழுவதை கண்டீரா? போவதைக் கண்டேன்.

வழ: நீர் பள்ளிவாசலுக்கு போகிறனீரா?- இல்லை

வழ: அழகக்கோனைப் பற்றி வேறுநோட்டீஸும் பார்த்தீர்?-ஆம்.

வழ: உமக்கு பிள்ளை உண்டா? ஆம்:

வழ: எத்தனை பிள்ளைகள்?- 8 பிள்ளைகள்

வழ: வீட்டில் எவ்வழவு காலமாக இருந்துவருகிறீர்?- 8 வருடம்.

வழ: வேறு வழக்கிற் குற்றப்பட்டிருக்கிறீரா?- வழக்கும் இல்லை, குற்றம்படவும் இல்லை.

வழ: அசிஸ் மரைக்காருடன் முன்பு எப்பொழுதாவதுகோபமாக இருந்திருக்கிறீரா?-இல்லை.

சின்னலெப்பை ஆதம் லெப்பை (வயது 63) சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இலந்தை மோட்டை பள்ளிவாசலில் 2 வருடம் கடமையாற்றினேன். குடியிருப்பு பள்ளிக்கூடத்தில் படிப்பித்தேன் அது அரசு பாடசாலை. நான் பிள்ளைகளுக்கு குரான் வாசிப்பதை என் மனைவிக்கு57 வயதுஎனக்கு 3 பிள்ளைகள் உண்டு. எனக்கு 14 பேரப்பிள்ளைகள் உண்டு.

கடந்த தேர்தலின் போது எனக்கு வாக்குரிமை இருந்தது.

மஜீத் மௌலவியை தெரியும். 64 ம் ஆண்டு முதல் அவரை தெரியும். அந்தநேரம் நான் அரசுபாடசாலையில் படிப்பித்துக் கொண்டிருந்தேன். அவர் பள்ளியில் கதிப்பாக இருந்தார். மஜித் மௌலவி சிலவேளையில் என்வீட்டில் சாப்பிட்டிருக்கிறார். அவர் கடையில் சாப்பிடுவது வழக்கம். சுகவீனமான நாட்களில் பள்ளியில் இருப்பார் அப்போது வீட்டில் சாப்பாடுகொடுப்பேன் பள்ளி பரிபாலகர் கூடி, மஜித் மௌலவியை கூப்பிட்டது தெரியும். நானும் அக்கூட்டத்திற்கு போயிருந்தேன், மௌலவியிடம் தொடர்ந்து கதிப்பாக இருக்கும்படி சொன்னார்கள். வேறு ஒன்றும் சொல்லவில்லை. அந்தநேரம் மௌலவி ஒன்றும் சொல்லவில்லை, கூட்டம் முழுநேரமும் அங்கேதான் இருந்தேன்.

வழ: எதற்காக அந்தக் கூட்டதை கூட்டினார்கள்?- எனக்கு தெரியாது.

ஆதம்லெப்பை மேலும் கூறியதாவது: மே 14-ம் திகதி இப்படியான நோட்டீசைப் பார்த்தேன். நான் வீட்டில் இருந்தபோது அழகக்கோன் ஐயா தந்தார். வேறு ஆட்களும் வந்திருந்தார்கள்.

வழ: அழகக்கோன் ஏதாவது சொன்னாரோ?- நான் தேர்தலில் போட்டியிடுகின்றேன் வாக்குகளை கொடுத்து இந்தமுறை அனுப்புங்கள் என்றார். அவர் ஒரு நோட்டீசை தந்துவிட்டு போய்விட்டார். நான்பிறகு பள்ளிக்கு போய்விட்டேன்

எதிர்மனுதார் சார்பில் பையா குறுக்குவிசாரணை செய்தபோது ஆதம்லெப்பை கூறியதாவது: 64-ம் ஆண்டு நான் பாடசாலையில் படிப்பித்தேன் அந்த பாடசாலை சாகுல் ஹமிட்டினுடையது. நான் 62-ம் ஆண்டு பாடசாலையில் சேர்ந்தேன், 64-ல் மௌலவி மஜீத் வந்தார். அவர் இந்தியாவைச் சேர்ந்தவர். அவர் மட்டக்களப்பிலிருந்தவந்தார். அவர் தனியாக வந்து பள்ளியில் தங்கியிருந்தார். அவரது குடும்பத்தினர் வரவில்லை. சில வேளைகளில் எனது வீட்டில் சாப்பிடுவார். மற்ற வேளைகளில் வீட்டிற்கு வரமாட்டார்.

வழ: பள்ளிபரிபாலகர்கள் கூட்டம் நடைபெற்றது?- ஆம்.

விசாரணை இன்று காலை 9-30 மணிக்குத் தொடர்ந்து நடைபெறும்.

## மரண அறிவித்தல்

உடுவில் மேற்கு திருமதி செல்லம்மா கந்தையா காலமாகி விட்டார்.

இவர் இலங்கை றெயில் வேயிலிருந்து இளைப்பாறிய திரு. வி. கந்தையாவின் மனைவியும் வீ. கே சுந்தரலிங்கம் (இ. போ. ச) இரத்தினசிங்கம் கங்காதரம் பரமசிவம் நகுலேஷ்வரன் தில்லிமலர், மீனுலோசினி, யோகேஸ்வரி ஆகியோரின் தாயாரும், வி. பொன்னுத்துரை (இ.போ.ச) வே. பாக்கியம் ஆகியோரின் சகோதரியுமாவர் அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணியளவில் இல்லத்திலிருந்துமானிப்பாய் பிபிலிமயானத்திற்கு ஈமக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். தகவல் தருபவர்: வி. பொன்னுத்துரை


மீண்டும் ஞாபகமூட்டுகிறோம்

# தீபாவளி மலிவு விற்பனை!

கட்டுப்பாட்டு விலையில் எம்மிடம் கிடைக்கும் ஹென்லி சுப்றிமா, மெக்ஸிக்கானு, கப்ஸ்டன், டயாறெசானு, ஒக்ஸ்வேவ், டயா ஈஸ்டர், டிப்ளோமாப் லக்ஸறி இன்னும் அநேக சேட்டுகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். நேரத்தை வீணாக்காமல் இன்றே விஜயம் செய்யுங்கள்.

முழுக்கையுடன் ரூபா 23/- அரைக்கையுடன் ரூபா 21

# ரொலறம்ஸ்

46, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7099



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண் கோவில் மேலே வீதி 53-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org